சூன் - 2010


திருவள்ளுவர் ஆண்டு 2041

# செந்தமிழ்

தொகுதி : 54
பகுதி : 8

விலை ரூ. 10/-

## திங்கள் இதழ்



மதுரைத் தமிழ்ச்சங்கம் 14-09-1901 THE MADURAI TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

# பேச்சு

கவிவேந்தர்
கா. வேழவேந்தன்

கற்கண்டுப் பேச்சாலே 'உறவு' கூடும்!
கடுங்கோபப் பேச்சாலே 'பகைமை' கூடும்!
தற்பெருமைப் பேச்சாலே 'வெறுப்' பே கூடும்!
சாதுரியப் பேச்சாலே 'வெற்றி' கூடும்!
சொற்புலமைப் பேச்சாலே 'சுவை'யோ கூடும்!
சுயநலத்துப் பேச்சாலே 'விரிசல்' கூடும்!
வற்புறுத்தும் பேச்சாலே 'வருத்தம்' கூடும்!
வாய்மையிலாப் பேச்சாலே 'கேடு' கூடும்!

பண்பான பேச்சாலே 'மேன்மை' கூடும்!
பரிவான பேச்சாலே 'பாசம்' கூடும்!
தண்சிரிப்புப் பேச்சாலே 'உயர்வு' கூடும்!
தடைபோடாப் பேச்சாலே 'சரி' வே கூடும்!
நுண்ணறிவுப் பேச்சாலே 'பெருமை' கூடும்!
நுரைவெட்டிப் பேச்சாலே 'வீழ்ச்சி' கூடும்!
எண்ணாத பேச்சாலே 'இன்னல்' கூடும்!
இனிமைமிகும் பேச்சால்தான் 'இன்பம்' கூடும்!

# செந்தமிழ்

(தோற்றம் 1902)


தொகுதி : 54 திங்கள் இதழ்

பகுதி : 8 திருவள்ளுவர் ஆண்டு 2041

சூன் 2010




வள்ளல் பாண்டித்துரைத்தேவர்

21.03.1867-02.12.1911

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 10 | |


**முகவை மன்னர் நா. குமரன் சேதுபதி**

தலைவர்,

மதுரைத் தமிழ்ச்சங்கம்.

---

**ஆசிரியர்**

**இரா. அழகுமலை** எம்.ஏ., எம்.ஃபில்.,

செயலாளர்,

மதுரைத் தமிழ்ச்சங்கம்,

மதுரை.

# பொருளடக்கம்


தமிழ் வாழ, வளர — *இரா. மோகன்குமார்* — 4

கசதப — *புலவர் ஆறுவிரல் ஐம்பொறி* — 9

இலக்கியத்தில் இளமை — *புலவர் சி. பாண்டுரங்கன்* — 14

செம்மொழித் தமிழ் – தமிழ்ச் செம்மொழி — 29
*தமிழாகரர் தெ. முருகசாமி*

சங்க இலக்கியங்களில்
மொழி சாராக் கருத்துப் பரிமாற்றம் — 34
*முனைவர் வீ. ரேணுகாதேவி*

# இதழ் மணம்

**அன்புடையீர்,**

**செந்தமிழ் வாசகர்களுக்கு வணக்கம்.**

தமிழுக்குத் தொண்டு செய்வோர் சாகாவரம் பெற்றவராவர் என்ற கருத்து செம்மொழித் தமிழ் மாநாட்டில் நிறைவுற்றதைக் கண்டு பேருவகை கொள்ளும் காலகட்டத்தில் செந்தமிழ் தொகுதி 54 பகுதி 8 தங்கள் கைகளில் தவழ்கிறது. இரா. மோகன்குமார் அவர்களின் "தமிழ் வாழ வளர" என்னும் கட்டுரை பல்லாண்டு காலப் போராட்டத்திற்குப் பிறகு தமிழுக்குச் செம்மொழித் தகுதி பெற்றதைப் பாராட்டுகிறது. மேலும் ஆக்கப்பூர்வமான 16 கருத்துக்களை இக்கட்டுரை காட்டிக் களிப்பூட்டுகிறது. அனைத்தும் அரசே செய்ய வேண்டும் என்ற எண்ணம் மாறி தமிழன் இனியாவது தன்னை உணரவேண்டும் என்ற எண்ணத்தை உணர்த்துவது பாராட்டுக்குரியது.

தமிழகத்தில் தமிழ்க்கல்லூரிகள் கலைக்கல்லூரிகளாக மாறிய அவலத்தை தினமலர் இதழ் சுட்டிக்காட்டி இருப்பது இந்த இதழில் நினைவிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

புலவர் ஆறுவிரல் ஐம்பொறி அவர்களின் "கசதப மிகும்" என்னும் இலக்கணக் கட்டுரை தமிழ் பயிலும் மாணவர்களுக்கும், பிழையின்றி எழுதவிரும்பும் தமிழர்களுக்கும் பயன்படும் என்று கருதுகிறோம்.

புலவர் சி. பாண்டுரங்கனின் "இலக்கியத்தில் இளமை" என்ற தலைப்பில் தொல்காப்பியர் காட்டிய தாவரங்களின் இளமைப் பெயர்கள் சங்க இலக்கியத் தொடர்களோடு காட்டப்பட்டுள்ளன. தொடர்ந்து பிள்ளைத்தமிழும், அதில கையாளப்படும் குழந்தைப் பருவ நிகழ்ச்சிகளையும் ஒப்பிட்டுக் காட்டியுள்ளது இளமையின் இனிமையை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது.

தமிழாரகர் தெ. முருகசாமி அவர்களின் "செம்மொழித் தமிழ் – தமிழ்ச் செம்மொழி" எனத் தடை – விடைகளோடு தம்முடைய கருத்துக்களை நிலைநாட்டியுள்ளார்.

நிறைவாக........ முனைவர் வீ. ரேணுகாதேவி அவர்கள் "சங்க இலக்கியங்களில் மொழிசாராக்கருத்துப்பரிமாற்றம்" என்ற கட்டுரையின் ஒரு பகுதியோடு தங்கள் கைகளில் இம்மாதச்செந்தமிழ் தவழ்கிறது.

இனி தவழும் குழந்தையும், தத்தெடுத்த தாங்களும்.

**முனைவர் க. சின்னப்பா**

# தமிழ் வாழ, வளர

*இரா. மோகன்குமார்*

செந்தமிழும் – நாப்பழக்கம் – இது தமிழுக்காக மட்டுமல்ல, எல்லா மொழிகளுக்கும் பொதுவானது. எம்மொழியையும் நாவழி பயிற்சியால்தான் கற்றுக்கொள்ள முடியும். ஒரு மொழியின் சொத்து அதன் சொல்வளம். அச்சொல்வளத்தை முழுமையாக துய்க்காத நிலையில் மொழியின் பயன்பாடு வெகுவாகக் குறையும். எல்லாச் சூழ்நிலைக்கேற்றவாறும் ஒருவரால் பேசவோ, உரையாடவோ, எழுதவோ முடியாது. அந்நிலை இன்று தமிழுக்கு ஏற்பட்டுள்ளது.

தாங்கள் அறிந்த தமிழ்மொழியின் தொன்மை, வளமை, செழுமையினை இளைய தலைமுறையினருக்கு மூத்தோர்கள் எடுத்துச் சொல்லவில்லை. மொழியுணர்வு, கலாச்சாரம், பண்பாடு சார்ந்த செய்திகள் ‘தொடர் ஓட்டத்தைப் போல’ ஒரு தலைமுறையினர், அடுத்த தலைமுறையினருக்கு எடுத்துச் சொல்ல வேண்டிய ஒன்று. அது நிகழாமல் போனதே இன்றைய ‘தேய்பிறை நிலைக்கு’ காரணம்.

எதிலும் முன்னோடி இனமாகத் திகழும் தமிழினம் ஆங்கில மொழியடிமைத்தனத்திற்கும் தன்னை முன்னோடியாக்கிக் கொண்டுவிட்டது. தவறின் பலனை இளைய தலைமுறையினர் அனுபவிக்க வேண்டிய கட்டாயம். அவர்களைக் குறை கூறுவது தவறு. முன் ஏர் எப்படியோ அப்படியே பின் ஏர்.

எண்ணற்ற இலக்கியத்தரம் வாய்ந்த சொற்களெல்லாம் அகராதிக்குள் அடங்கிக் கிடக்கின்றன. இன்று அன்றாடம் வாழ்க்கையில் உண்ணல், உடுத்தல், உறைதல், உறங்குதல் சார்ந்த சொற்கள் மட்டுமே இளைய தலைமுறையால் தெரியப்பட்டுப் பயன்பாட்டில் உள்ளன.

தமிழ்மொழியில் உள்ள இலக்கியம், அறிவியல், மருத்துவம், விண்ணியல், விவசாயம், கலை, கலைத்துறை, இசை சார்ந்த சொற்கள் அறியப்படாததால் பயனற்றுக்கிடக்கின்றன. இது மொழிக்கும் இழப்பு, மொழியின் உரிமையாளர்களுக்கும் பேரிழப்பு. இதுவே தமிழின் நிலை.

பல்லாண்டு போராட்டத்திற்குப் பிறகு தமிழ்மொழிக்குச் செம்மொழித்தகுதி பெறப்பட்டுள்ளது. இத்தகுதியினை நின்று நிலைத்து

காத்திடும் பொறுப்பு இன்றைய இளைய தலைமுறையையும் நாளை வரப்போகும் தலைமுறையையும் சார்ந்தது. ஆனால் அவர்களிடம் மொழிச் சொத்தினை ஒப்படைக்கும் முன் சொத்தின் அளவையும் வீச்சையும் எடுத்துரைக்காமலேயே காலம் கழிந்து கொண்டுள்ளது. இனியும் வாளாவிருப்பது மொழிக்கு நாம் செய்யும் நன்றி மறந்த செயலுக்கு ஒப்பாகும்.

நடைபெறவுள்ள உலகச் செம்மொழி மாநாடு கூடிக் கலைகின்ற நிகழ்வாக அமையாமல் தமிழ் மொழிக்கு புதிய பரிமாணத்தை கொடுக்கின்ற வகையில் அமைக்க வேண்டும்.

தொட்டணைத்தூறும் மணற்கேணியைப் போலத் தமிழ்க் காப்பியங்கள் படிக்கப் படிக்க புதுப்பொருளை புதுக் கருவை அளிக்கும் தன்மையுள்ளது. ஆய்வுக்கட்டுரைகள் மூலம் தோண்டியெடுக்கப்பட்ட புதையல் செய்தித்தாள்களில் செய்தி வடிவத்தோடு நின்றுவிடாமல் பள்ளி, கல்லூரி மற்றும் இளைய சமுதாயத்தின் செவிவழி பாமரனையும் சென்றடையத் தொடர் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும்.

உடனடித் தேவையாகத் தமிழ்மொழி பயிற்றுவிக்கப்படும் தொடக்க நிலையிலிருந்தே மொழியின் தொன்மை, வளமை, செழுமையினை எடுத்தியம்புகின்ற கற்பித்தல் முறைக்கு வழிவகுக்க வேண்டும். பாடப்பகுதியோடு பாடநூலோடு நின்றுவிடும் கற்பித்தல் முறையில் மாற்றங்கள் கொண்டு வரப்படவேண்டும். திட்டங்கள், செயல்பாடுகளுக்குச் சில.

1. பள்ளி வளாகத்தில் மொழி ஆசிரியர்கள் வட்டார வழக்கு மொழி நடையோடு நின்று விடாமல், உரைநடை முறைத் தமிழில் பேசுகின்ற முறையைக் கடைபிடிக்க வேண்டும்.

2. பேரறிஞர் அண்ணா ஆசிரியர்களுக்கு அளித்த உயர்கல்விக்கான ஊக்க ஊதியத்திட்டம், ஊக்க ஊதியத்திற்காக மட்டுமே என்ற நிலையை மாற்றி, உயர்கல்வியின் பயனை மாணவர்கள் அடைகின்ற வகையில் கல்விப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

3. பேச்சுக் கலையை வளர்த்த வரலாறு கொண்ட இம்மண்ணில், கல்வித் துறையில் பணியாற்றுபவர்கள் இது குறித்து சிந்திக்கவும் தத்தம் வாழ்வில் செயல் வடிவம் கொடுக்கவும் கல்வித்துறை திட்டங்களை வகுக்க வேண்டும்.

4. பல்துறை புதிய சொற்களை 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை நாளொன்றுக்கு 5 சொற்கள் வீதம் பள்ளி வகுப்பறையிலோ செய்திப்பலகையிலோ பொருளோடு எழுதி அதனை அனைத்து மாணவர்களும் பதிவு செய்து கொள்ளவும், அவற்றைப் பள்ளிச் சூழலிலும் கட்டுரைகளிலும் சுவடியிலும் பயன்படுத்தும் முறையை அறிமுகம் செய்ய வேண்டும்.

5. மாவட்ட அளவில் தமிழாசிரியர்கள் குழுவை உருவாக்கி, ஒன்றிய வட்டார அளவில் 9ஆம் வகுப்பு மாணவர்கட்கு 'வளர்தமிழ்க் கல்வி பயிலரங்கம்' மூலம் இயல் இசை நாடகம் அறிவியல் தமிழ் சார்ந்த சிறப்புச் செய்திகளைச் சொல்லுதல் வேண்டும்.

6. மேல்நிலைப் பிரிவு மாணவர்கட்குக் கேட்டல், பேசுதல், சார்ந்த அகமதிப்பீட்டிற்கு ஏட்டளவு செய்மொழிப் பயிற்சியினை மாற்றிப் புறத் தேர்வாளர்களைக் கொண்டு பேச வைத்து எழுத வைத்து மதிப்பெண் வழங்குதல் வேண்டும்.

7. பள்ளிகளில் வாராந்திர இலக்கியக் கூட்டங்களை நடத்திய தலைமையாசிரியர்கட்கு மட்டுமே 'நல்லாசிரியர் விருது வழங்கப்படும்' என்ற விதி உருவாக்கப்படுதல் வேண்டும்.

8. தமிழ்மொழிசார் பணிகளில் கூடுதல் ஈடுபாடு காட்டும் செய்தித் தாள்களுக்கு, தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு, ஆண்டுதோறும் அரசு விருதுகள் வழங்கிச் சிறப்பிக்க வேண்டும்.

9. அரசுக் கருவூல ஏடுகள், விநியோக ஏடு, கருவூலச் சான்றுச் சீட்டுகள் படிவங்கள் தமிழ்ப்படுத்தப்பட வேண்டும்.

10. தமிழக அரசின் ஆணைகளைத் தமிழ்மொழியிலேயே வெளியிடுதல் வேண்டும்.

11. நீதிமன்ற நடவடிக்கைகள் அனைத்தும் தமிழ் மொழியிலேயே மேற்கொள்ளப்பட வேண்டும்.

12. சந்தையிடப்படும் அனைத்துப் புதிய பொருட்களும் தமிழ்வளர்ச்சித் துறையின் மூலம் தமிழில் பெயரிடப்பட்டு அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

13. தமிழ் இலக்கிய இதழ்களை அப்பகுதி பல்கலைக் கழகங்களின் செய்தி ஏடுகளாக அங்கீகரிக்க வேண்டும். பள்ளிகள், கல்லூரிகள் அவற்றை வாங்கி ஆசிரியர்கள் மாணவர்கட்கு வாசிக்க வாய்ப்பளிக்க வேண்டும்.

14. இடைநிலை ஆசிரியர் பயிற்சி, இளங்கலை, முதுகலை கல்வியியல் பயிலும் மாணவர்களின் திறனூக்கத் திட்டமாக அவர்கள் பயிலும் கல்லூரிகளின் அருகில் உள்ள கிராம மக்களிடம் ஊராட்சி அமைப்புகளோடு இணைந்து மொழி, இலக்கியம், காப்பியங்கள் சார்ந்த செய்திகளைப் பரப்புரை செய்யும் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். இது மாணவர்களிடையே மொழியாற்றலை வளர்க்கும் வேளையில் பொதுமக்களிடம் மொழிசார்ந்த விழிப்புணர்ச்சியையும் ஆற்றலையும் மேம்படுத்தலாம். இப்பணிக்கு அகமதிப்பீட்டு முறையில் மதிப்பெண்களையும் வழங்கலாம்.

15. தமிழ் இலக்கியம் பயிலும் மூன்றாமாண்டு, முதுகலை, ஆராய்ச்சி மாணவர்களைக் கல்லூரி அமைந்துள்ள பகுதியில் உள்ள உயர்நிலை மேல்நிலைப் பள்ளி மாணவர்களிடையே பலதரப்பட்ட தலைப்புகளில் மொழிசார்ந்த உரை நிகழ்த்தப் பயிற்றுவிப்பதோடு பள்ளிகளில் சென்று உரை நிகழ்த்துவதை தொடர் நிகழ்வாக ஆக்குதல் வேண்டும்.

16. கலை, கலையுணர்வு என்ற எண்ணத்தில், கணிணி வழியாகவோ, இன்னபிற முறைகளாகவோ தமிழ் எழுத்துக்களின் வடிவங்களைச் சிதைப்பதை அரசு உடனடியாக ஆணையிட்டுத் தடுக்க வேண்டும். இல்லையெனில் தமிழைப் பயிலும் இளம் சிறார்களின் மனதில் அலட்சியப்போக்கு உருவாகிவிடும்.

அரசு, அரசு என்று அனைத்தும் அரசே ஆணை வழி செய்யவேண்டுமென்ற எண்ணம் மாற வேண்டும். மொழி என்பது பொதுச் சொத்து. உலகத்திற்கு மூத்த மொழியை வழங்கிய பேரினம் நம் இனம். நான் அந்த மொழிக்கும் இனத்திற்கும் சொந்தக்காரன் என்ற இறுமாப்போடு பிறமொழிக் கலப்பின்றித் தமிழை இனிமையாகப் பேச, இயைந்தபடி எழுத ஒவ்வொருவரும் முடிவெடுத்துச் செயல்பட உறுதி பூணவேண்டும். செம்மொழி மாநாடு புது சகாப்தத்தின் தொடக்கமாக அமைய வேண்டும்.

# தமிழகத்தில் இயங்கிய தமிழ் கல்லூரிகள் கலைக்கல்லூரிகளாக மாறிய அவலம்

தமிழகத்தில் இயங்கி வந்த தமிழ்க் கல்லூரிகள் அனைத்தும் கலைக்கல்லூரிகளாக மாறி வருகின்றன. செம்மொழி மாநாடு நடத்தும் அரசு தமிழ் வளர்ச்சி ஆணையம் அமைக்க கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் தமிழ் மொழிப்பாடங்களைப் பயிற்றுவிக்கும் தமிழ்க் கல்லூரிகள் பல இயங்கி வந்தன. தற்போது, இந்தக் கல்லூரிகள் தமிழ்ப் படிக்க இளைஞர்களிடையே ஆர்வம் இல்லாததால் தமிழ்க் கல்லூரிகள் அனைத்தும் கலைக் கல்லூரிகளாக மாற்றம் செய்யப்பட்டு வருகின்றன. தமிழகத்தில் மதுரை செந்தமிழ்க் கல்லூரி, திருவையாறு அரசர் தமிழ்கல்லூரி, தஞ்சையில் கரந்தை தமிழ்க்கல்லூரி, மேலைச்சிவபுரி சன்மார்க்க சபையின் கணேசர் செந்தமிழ்க் கல்லூரி, சிவகங்கை, காரைக்குடியில் ராமசாமி தமிழ்க்கல்லூரி, திருநெல்வேலி பாபநாசத்தில் திருவள்ளுவர் கல்லூரி எனத் தமிழ்க் கல்லூரிகள் இயங்கி வந்தன. **இதில் மதுரை செந்தமிழ்க் கல்லூரியும், காரைக்குடி ராமசாமி தமிழ்க் கல்லூரி மட்டுமே தமிழ்க் கல்லூரிகளாக உள்ளன.**

மற்ற அனைத்துக் கல்லூரிகளும் கலைக்கல்லூரிகளாக மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

தமிழ்ப் பட்டபடிப்பு படிக்கும் இளைஞர்களுக்கு ஒரே வாய்ப்பு ஆசிரியர் தொழில்தான். அதில் இடைநிலை ஆசிரியர்களாக பணியாற்றுவோர் பலர் அஞ்சல் வழியில் தமிழ் பட்டப்படிப்புகளைப் படித்து, தமிழாசிரியர்களாக பதவி உயர்வு பெற்று விடுகின்றனர். இது போன்ற காரணங்களால் தமிழ் மொழிப்படிப்பு கேள்விக்குறியாக மாறி வருகிறது. இதனால் இளைஞர்கள் மத்தியில் தமிழ் மொழி படிக்கும் ஆர்வம் குறைந்து விட்டது.

– நன்றி : தினமலர் 06.06.2010

---

உலகத்தமிழ் செம்மொழி மாநாட்டில் தமிழக முதல்வர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழில் படித்த மாணவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்கப்படும் என அறிவித்துள்ளார். இந்த அறிவிப்பிற்கு செந்தமிழ்க் கல்லூரிச் செயலர் அவர்கள் தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கடிதம் எழுதியுள்ளார். அக்கடிதத்தின் விவரம் வரும் இதழில்........

# கசதப

*புலவர்*
*ஆறுவிரல் ஐம்பொறி*

தமிழ் மொழியில் இருசொற்கள் புணரும்போது வருமொழியின் முதல் எழுத்து வல்லெழுத்தாக இருப்பின் அவ் வல்லேழுத்து சில இடங்களில் மிகும். வல்லெழுத்துகள் க்,ச்,ட்,த்,ப்,ற் என ஆறாகும். இவற்றுள் சொல்லின் முதலில் வரும் வல்லெழுத்துகள் க்,ச்,த்,ப் என நான்கே. எஞ்சியுள்ள இரு வல்லெழுத்துகளும் (ட்,ற்) சொல்லின் முதலில் வாரா. எனவே வருமொழி முதலில் வரும் க்ச்த்ப் என்ற நான்கு எழுத்துகளே சில இடங்களில் மிகும். இந்த இடங்களை வலி மிகும் இடங்கள் என்று கூறுவர். இதனை,

**'கசதப மிகும் '**

என்று நன்னூல் (165) மொழிகிறது. கசதப என்னும் போது அந்த நான்கு எழுத்துக்களின் வருக்க எழுத்துகளும் அவற்றுள் அடங்கும். கசதப மிகும் இடங்கள் சிலவற்றை இவண் காண்போம்.

1. அந்த, இந்த, எந்த, அங்கு, இங்கு, எங்கு, அப்படி, இப்படி, எப்படி, அவ்வகை, இவ்வகை, எவ்வகை, அத்துணை, இத்துணை, எத்துணை, ஆண்டு, ஈண்டு, யாண்டு, யாங்கு, இனி, தனி, முழு, திரு, அரை, பாதி, நடு, பொது, அணு, மற்று, மற்ற, மற்றை முதலிய சொற்களின் பின் கசதப மிகும். இந்தக்குகை, இப்படிச்சொன்னான், திருப்பதி. இது போன்ற காட்டுகளை இங்குள்ள முப்பத்தொரு சொற்களுக்கும் கூட்டி அறிக.

2. அ, இ என்னும் சுட்டெழுத்துக்களுக்குப் பின் கசதப மிகும். அக்குடம், இப்புத்தகம் அச்செய்தி, இத்திக்கு.

3. ஓர் எழுத்து ஒரு மொழிகளுக்குப் பின் கசதப மிகும். ஆக்கூட்டம், தீப்பிடித்தது, ஈச்சிறகு, தைத்திங்கள்.

4. எ என்னும் வினா எழுத்துக்குப் பின் கசதப மிகும். எப்பாடம்? எக்குடம்? எச்செய்தி? எத்திக்கு?

5. வன்றொடர் குற்றியலுகரங்களின் பின் கசதப மிகும். எட்டுத்திசை, இனிப்புச்சுவை, தச்சுத்தொழில், கேட்டுச்செல், பாட்டுப்பாடு, விற்றுச்சென்றான்.

6. மென்றொடர் குற்றியலுகரங்களின் பின் சில இடங்களின் கசதப மிகும். குண்டுக்கல், பாம்புத்தோல், மருந்துக்கடை, பண்புத் தொகை.

7. ஒற்றிரட்டிய உயிர்த் தொடர் குற்றியலுகரங்களின் பின் கசதப மிகும். குருடு + பையன் = குருட்டுப்பையன். திருடு + பெட்டி = திருட்டுப்பெட்டி.

8. ஒற்றிரட்டிய நெடிற்றொடர் குற்றியலுகரங்களின் பின் கசதப மிகும். நாடு + பாடல் = நாட்டுப்பாடல். காடு + தீ = காட்டுத்தீ. ஏடு + சொல் = ஏட்டுச்சொல். பாடு + கட்டு = பாட்டுக்கட்டு.

9. உயிரீற்றுச் சொற்களின் பின் கசதப மிகும். மழைக்காலம், பனித்துளி, தலைக்கட்டு, கனிச்சாறு.

10. அ என்னும் ஈற்றையுடைய வினையெச்சங்களின் பின் கசதப மிகும். பருகத்தந்தான், தேடச்சென்றான், செய்யச் சொன்னான், நன்றாகப்படி.

11. இ என்னும் ஈற்றையுடைய வினை யெச்சங்களின் பின் கசதப மிகும். கூறிச்சென்றான், கூடிப்பேசினர், எழுதிப்பார், ஓடிப்போனான்.

12. ஆய், போய் என்னும் வினையெச்சங்களின் பின் கசதப மிகும். நன்றாய்ப்பேசினார், படிப்பதாய்ச் சொன்னார், போய்த்தேடு, போய்ப்பார்.

13. செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சங்களில் கசதப மிகும் பெய்யாக்கொடுக்கும், உண்ணாக்கிடந்தன, கேளாக்கொடுத்தான், பயிலாப்பாடம்.

14. ஈறு கெட்ட எதிர்மறை பெயரெச்சங்களில் கசதப மிகும். வளையாச்செங்கோல், தோன்றாக்கெடும், தீராத்துன்பம், ஓடாப்புலி.

15. பண்புத் தொகையில் கசதப மிகும். வட்டக்கல், புதுப்போர்வை, வெள்ளைத்தாள், மெய்ப்பொருள்.

16. இருபெயரொட்டுப் பண்புத் தொகைகளில் கசதப மிகும். சாரைப்பாம்பு, மார்கழித்திங்கள், மல்லிகைப்பூ, வெண்டைச்செடி.

17. உவமைத்தொகைகளில் கசதப மிகும். மலர்த்தாள், தாமரைக்கண், முத்துப்பல்.

18. தனிக்குற்றெழுத்தை அடுத்துவரும் ஆகாரங்களின் பின் கசதப மிகும். பலாச்சுளை, சுறாத்தலை, நிலாச்சோறு.

19. இரண்டாம் வேற்றுமை விரிகளின் பின் கசதப மிகும். யானையைக்கண்டேன், பொருளைத்தேடு, அன்பைக்கேள், பையைக்கொடு.

20. இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகைகளில் கசதப மிகும். தயிர்க்குடம், தேர்ப்பாகன், தண்ணீர்ப்பானை.

21. மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையில் கசதப மிகும். பருத்தித்துணி, அரிசிச்சோறு, மரப்பலகை.

22. நான்காம் வேற்றுமை விரிகளின் பின் கசதப மிகும். மயிலுக்குப்போர்வை, புலவர்க்குக் கொடு, பள்ளிக்குப்போ, கடைக்குச்செல்.

23. நான்காம் வேற்றுமைத் தொகையில் அஃறிணைப் பெயர்களின் பின் கசதப மிகும். கூலித்தொழில், மல்லிக்காசு, சட்டைத்துணி.

24. ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையில் கசதப மிகும். விழிப்புனல், வாய்ச்சொல்.

25. ஆறாம் வேற்றுமை தொகைகளில் கசதப மிகும். முல்லைப்பூ, நாய்க்கால்.

26. ஏழாம் வேற்றுமை விரிகளில் கசதப மிகும். காட்டிடைச்சென்றான், வீட்டிடைப்பார்த்தார்.

27. ஏழாம் வேற்றுமைத் தொகைகளில் கசதப மிகும். குடிப்பிறந்தார், வழிச்சென்றார்.

28. ஏழாம் வேற்றுமை உருபும் பயனும், உடன் தொக்க தொகைகளில் கசதபமிகும். நீர்ப்பாம்பு, மலைக்குகை, சென்னைக் கல்லூரி.

29. எட்டு, பத்து ஆகிய இரண்டு வன்றொடர் குற்றியலுகர எண்ணுப்பெயர்களின் பின் கசதப மிகும். எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, எட்டுக்கட்டு, பத்துச்சொட்டு.

30. சால; தவ என்னும் உரிச்சொற்களின் பின் கசதப மிகும். *சாலச்சிறந்தது, சாலப்பேசினான், தவச்சிறிது, தவப்பெரியது.*

### கசதப மிகா இடங்கள் சிலவற்றை ஈண்டு காண்போம்

1. அன்று, இன்று, என்று, அத்தனை, இத்தனை, எத்தனை, அவ்வாறு, இவ்வாறு, எவ்வாறு, அவ்வளவு, இவ்வளவு, எவ்வளவு, அவை, இவை, *எவை, யாவை, அது, இது, எது, யாது, சில, பல முதலிய சொற்களின் பின்* கசதப மிகாது. அன்று பார்த்தான்; இத்தனை பூக்கள், எவ்வாறு படித்தாய். இது போன்ற காட்டுகளை இங்குள்ள இருபத்திரண்டு சொற்களுக்கும் கூட்டி அறிக.

2. முதல் (எழுவாய்) வேற்றுமைகளின் பின் கசதப மிகாது. குவளை பூத்தது, பனி பெய்தது, மதி கெட்டது, கோழி கூவிற்று.

3. இரண்டாம் வேற்றுமைத் தொகைகளில் கசதப மிகாது. கதை சொன்னான், தமிழ் கற்றான், நீர் குடித்தான், துணி கட்டினான்.

4. மூன்றாம் வேற்றுமை விரிகளின் பின் கசதப மிகாது. அழகனொடு சென்றான், அவனோடு பேசினான், தந்தையொடு தாயும் வந்தாள், அறிவொடு செல்வமும் வேண்டும்.

5. ஐந்தாம் வேற்றுமை விரிகளின் பின் கசதப மிகாது. வீட்டிலிருந்து சென்றான், குடிசையிலிருந்து புறப்பட்டான், வகுப்பினின்று சென்றான்.

6. ஆறாம் வேற்றுமை விரிகளின் பின் கசதப மிகாது. எனது புத்தகம், சூரியனது கதிர்கள், திருமூலரது திருமந்திரம், கந்தனது கைகள்.

7. விளித்தொடர்களில் கசதப மிகாது. தம்பீ போ, அண்ணா பார், மன்னா கேள், மகனே சொல்.

8. வியங்கோள் வினை முற்றுகளின் பின் கசதப மிகாது. வாழியக செந்தமிழ், வளர்க புகழ், வீழ்க கொடுமை, கற்க கசடற.

9. ஆ, ஓ, ஏ, யா எனும் வினா எழுத்துக்களின் பின் கசதப மிகாது. நீயா செய்தாய்? யானோ கள்வன்? அவனே கற்றான்? யா காவார்?

10. வன்றொடர் குற்றியலுகரம் தவிர்த்து ஏனைய ஐந்து தொடர் குற்றியலுகரங்களின் பின் கசதப மிகாது. வீடு, பெரிது, வயிறு சுருங்கியது, பந்து தந்தான், செய்து காட்டினேன், எஃகு திண்ணியது.

11. வினைத் தொகைகளில் கசதப மிகாது. எழுகதிர், விரிகடல், சுடுசோறு, விளைபயிர்.

12. உம்மைத் தொகைகளில் கசதப மிகாது. கபிலபரணர், தாய்தந்தை, கல்விகேள்வி, காய்கனி, இரவுபகல் (இராப்பகல் போன்று சிறுபான்மை உம்மைத் தொகையில் கசதப மிகுதல் உண்டு)

13. ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் தவிர்த்து ஏனைய பெயரச்சங்களில் கசதப மிகாது. உண்ட சோறு, கொடுத்த பொருள், படித்த பெண், சிறிய தோட்டம்.

14. வினை முற்றுகளில் கசதப மிகாது. பாடின பறவை, கூவின குயில்கள்.

15. அடுக்குத் தொடர்களில் கசதப மிகாது. தீ தீ, பாம்பு பாம்பு.

16. இரட்டைக்கிளவிகளில் கசதப மிகாது. கலகல, பளபள.

17. படி என்று முடியும் வினையெச்சங்களின் பின் கசதப மிகாது. போகும்படி கூறினான். தரும்படி கேட்டான், கொடுக்கும்படி சொன்னான்.

18. எட்டு, பத்து ஆகிய இரண்டு குற்றியலுகர எண்ணுப் பெயர்களைத் தவிர்த்து ஏனைய எண்ணுப் பெயர்களின் பின் கசதப மிகாது. இரு தலைகள், மூன்று குலைகள், நான்கு தட்டுகள், ஐந்து சொற்கள்.

19. உகர ஈற்று வினையெச்சங்களில் கசதப மிகாது. வந்து பார்த்தான், கண்டு களித்தான், சென்று தந்தான்.

20. எதிர்மறைப் பெயரெச்சங்களில் கசதப மிகாது. தேடாத செல்வம், உண்ணாத சோறு, பாடாத பாட்டு.

கசதப மிகும் இடங்கள் சிலவற்றையும், மிகாத இடங்கள் சிலவற்றையும் கண்டோம். எஞ்சியவற்றை நல்ல நூல்களைப் படிக்கும் போது வந்துழி கண்டறிக.

மிகும் இடங்களில் மிகாது எழுதுவதும் மிகாத இடங்களில் மிகுத்து எழுதுவதும் பிழைகளே, இப் பிழைகளைச் சந்திப் பிழைகள் என்று கூறுவர்.

சந்திப்பிழைகளால் எழுதுபவர் எண்ணிய பொருள் வேறுபட்டுத் தோன்றுவதற்கு வாய்ப்புள்ளது. நாடி துடிக்கிறது என்னும் போது ஒருவரின் கை நாடி துடிக்கிறது என்று பொருள் படுகிறது. நாடித்துடிக்கிறது என்னும் போது ஒருவரை நாடி (விரும்பி)த் துடிக்கிறது என்று பொருள் படுகிறது. தந்தப்பெட்டி என்னும் போது தந்தத்தால் ஆன பெட்டி என்று பொருள் படுகிறது. தந்த பெட்டி என்னும் போது கொடுத்த பெட்டி என்று பொருள் படுகிறது.

*மழைக்காலம் நன்று - மழை காலம் பார்த்து பெய்யும்.*

*பாம்புத்தோலை விற்றான் - பாம்பு தோல் உரிக்கும்.*

*கன்றுக்குட்டி பால்குடித்தது - கன்று குட்டி போடுமா?*

இந்த எடுத்துக்காட்டுகளில் ஈற்றெழுத்தும் முதல் எழுத்தும் ஒன்றாக இருந்த போதிலும் கசதப மிகுந்தும், மிகாமலும் வருவதை உணர்க. பொருள் வேறுபடுவதையும் உணர்க.

எனவே பொருள், இலக்கணம், மரபு, நினைவாற்றல், நிலை மொழி ஈற்றெழுத்து, வருமொழி முதல் எழுத்து இவற்றை மனதில் இருத்தி கசதப மிகும் இடங்களையும், மிகா இடங்களையும் அறிந்து சந்திப் பிழையின்றி எழுதுவதே தமிழின் செழுமைக்குச் சாலச் சிறந்ததாகும்.

# இலக்கியத்தில் இளமை

*புலவர் சி. பாண்டுரங்கன்*
*ஆம்பூர்*

உலக வாழ்க்கையின் வசந்தகாலமாகத் திகழ்வது, பொன்னான இளமைப் பருவம்.

காலத்தின் கண்ணாடியாகத் திகழும் இலக்கிய வழி நின்று, இளமை பற்றிய இலக்கிய இன்பம் நுகர்தலே இக்கட்டுரையின் நோக்கம்.

ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியர் உயிர்களுக்குரிய இளமைப் பெயர்களைப் பட்டியலிட்டார். தாவரங்களின் இளமைப் பெயர்கள் பின்வறுமாறு :

*"பிள்ளைகுழவி கன்றே போத்தெனக்*
*கொள்ளவும் அமையும் ஓரறி வுயிர்க்கே !"*

தெங்கம்பிள்ளை, கமுகங்கன்று, கருப்பம்போத்து எனச்சுட்டினார் இளம்பூரணர்.

*'மாற்றரும் சிறப்பின் மரபியல் கிளப்பின்*
*பார்ப்பும் பறழும் குட்டியும் குருளையும்*
*கன்றும் பிள்ளையும் மகவும் மறியுமென்(று)*
*ஒன்பதும் குழவியொ டிளமைப் பெயரே".*

- இவை பறவை மற்றும் விலங்கினங்களின் இளமைப் பெயர்கள்.

மூன்று இலக்கியங்களிலிருந்து, இளம்பூரணர் எடுத்துக்காட்டும் அழகே அழகு !

1. **கலித்தொகை :**

   *"பறவை தம் பார்ப்புள்ள"*

2. **குறுந்தொகை :**

   *'வெள்ளாங்குருவின் பிள்ளையும் பலவே" ;*
   *"யாமைப் பார்ப்பின் அன்ன"*

3. **ஐங்குறுநூறு :**

   *'தன்பார்ப்புத் தின்னும் பண்பின் முதலை"*

ஓரறிவுயிர்க்கெனக் குறித்த நான்கு வகை இளமைப் பெயர்களையும், நெல்லுக்கும், புல்லுக்கும் பயன்படுத்தமாட்டார் என வகுத்தார் தொல்காப்பியர்.

*"விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே*
*பசும்புல் தலைகாண் பரிது."*

நிலத்துக் கணியென்ப நெல்லும், கரும்பும், "நெல்லு க்(கு) இறைத்த நீர் வாய்க்கால் வழியோடிப் புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்."

"நீர் உயர நெல் உயரும்....." எனும் செய்யுள் வரிகளும், "செந்நெல் ஏரி, நெற்குன்றம், நெற்கட்டும் செவ்வல், நெற்கட்டான் செவ்வல்" எனும் தொடர்களும் ஒப்பு நோக்கத் தக்கன.

*"நிலத்திற் கிடந்தமை கால்காட்டும் காட்டும்*
*குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல்".*

இத் திருக்குறளில் கால் - என்னும் சொல் முளை என்றும் பொருள் தருவதாகப் பரிமேலழகர் குறித்தார். முதலில் தோன்றிய தழைத்த தண்டு எனக் காலிங்கர் பொருள் தந்தார்.

*"பழையன கழிதலும் புதியன புகுதலும்*
*வழுவல கால வகையி னானே"*

எனக் கூறி நன்னூல் பவனந்தியாரும், மொழியின் முன்னேற்றத்திற்கு அரசபாதை அமைத்தாரன்றோ?

*"நெல் நாற்று, நாற்றங்கால், நாற்றுநடும் இயந்திரம்,"*

எனும் தொடர்கள், உழவர் வாழ்வில் பயின்றுவருவன.

*"பசுமை திரும்பும் (நெல்) நாற்று,*
*கிளைக்கும் பயிர், பால் பயிர்"* என்பன
வளர் பயிரைக் குறிப்பன.

*"குழவியும் மகவும் ஆயிரண் டல்லவை*
*கிழவ அல்ல மக்கட் கண்ணே"* எனத் தொல்காப்பியம் செப்புகின்றது.

மனிதரின் இளமைப் பெயர்கள் குழவி மற்றும் மகவு. *"குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும் ஆளன் றென்று வாளில் தப்பார்,"* எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலில், குழவி என்னும் சொல், பிள்ளையை உணர்த்தியது.

வீரத்தின் விளைநிலமாகத் திகழ்ந்த குடும்பத் தலைவி தன் கணவனும், தந்தையும், பகை வென்று புகழுடம்பு எய்திய நிலையில், மூன்றாம் நாள் போர் முரசு கேட்டு, நாடு காக்க போரில் வெல்ல, தன் இளமைப் பருவ மகனை அழைத்து, போருக்கு அனுப்பும் காட்சியை ஒக்கூர் மாசாத்தியார்,

*''கெடுக சிந்தை கடிதிவள் துணிவே''*
எனத் தொடங்கும் (புறநானூறு 279) பாடலில்,
எழுத்தோவியமாக்கியுள்ளார்:

*''......இன்றும் செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி*
*வேல்கை கொடுத்து வெளிதுவிரித் துடீஇப்*
*பாறு மயிர்க் குடுமி யெண்ணெய் நீவி*
*ஒருமக னல்ல தில்லோள்*
*செருமுக னோக்கிச் செல்கென விடுமே''.*

கழகப் பதிப்பு உரையில், உரைவேந்தர் ஔவை
சு. துரைசாமிப்பிள்ளை,

''தன்னொரு மகனும் மிக இளையனாதலை அறியாது, செருமுக நோக்கிச் செல்கஎன விடுத்தற்கேது இதுவென்பார். 'மயங்கி' என்றும் (கூறினார்)' - என நுண்ணிதின் உணர்த்திய கருத்து, ஈண்டு அறிந்து போற்றத்தகும்.

ஆக, ஓரறிவு உயிர் முதலாக, ஆறறிவு உயிர்வரை உள்ள அனைத்துப்பிரிவின் இளமைப்பெயர்களை உள்ளடக்கியே, கழகத் தொகையகராதியும், பட்டியலிட்டது:

1. பார்ப்பு 3. குட்டி 5. கன்று 7. மகவு
2. பறழ் 4. குருளை 6. பிள்ளை 8. மறி 9. குழவி

புனிற்றிளங்கன்று என வருவது, மிக்க இளமையைக் குறிக்கின்ற, 'ஒருபொருட்பன்மொழி' ஆகும்.

அகநானூற்றில் ஓங்குமலை எனத்தொடங்கும் பாடலில் சங்கப்புலவர் வெள்ளிவீதியார் தலைவனைத்தேடி அலைந்த செய்தியை உவமை வழிச்சுட்டுகிறார். தோழிக்குத் தலைமகள் சொல்லியதாகத் துறை அமைய, அழகு ததும்பப் பாடினார் ஔவையார். தலைவர் விரைந்து வருவார் என உணர்த்துகின்ற இப்பாடலில், 'மலையில் மூன்று குருளைகளை ஈன்று பசியோடு உள்ள பெண் புலிக்கு இரங்கி, அதனை உண்ணச் செய்யும் பொருட்டு, இரையைத் தேடி, கொம்புடைய ஆண்மானின் குரலைத் தன் செவியால் உற்றுக்கேட்கும் ஆண்புலி உலவும் வழி'' எனச் சுரம் சுட்டப்படுகிறது.

புலியின் மூன்று குருளைகளும் அப்பொழுதுதான் பிறந்தன. அதனால், அவற்றின் நகங்கள் தசைப்பகுதியினின்று வெளிவராது, பொதிந்திருந்தன. இளமை சுட்டும் அவ்வரிகள் :

*''ஊன்பொதி அவிழாக் கோட்டுகிர்க் குருளை*
*மூன்றுடன் ஈன்ற முடங்கர் நிகழ்த்த*
*துறுகல் விடரளைப் பிணவுப்பசி கூர்ந்தென....''*

மனித குலத்தில், குடும்பத்தின் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழும் குழந்தை குறித்து, இலக்கியங்கள் நிரம்பப் பேசுகின்றன. எவ்வளவு பெரிய செல்வராயினும், உண்ணும்போதே, இடையிடைக் குறுகுறு நடந்து, சிறுகை நீட்டி, இட்டும், தொட்டும், கவ்வியும் துழந்தும், நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும், மயக்குறுபிள்ளை பெறாஅராயின், அவ்வாழ்வில் பயனின்றெனச் சிந்தனைத் துளியைப் பாடலில் பெய்து வைத்தார் செந்தமிழ்ப் புலவர்.

அதனால்தான் திருவள்ளுவரும்,

*''அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்*
*சிறுகை அளாவிய கூழ்''* எனவும்,
*''குழலினி தியாழினி தென்பதம் மக்கள்*
*மழலைச்சொல் கேளா தவர்''* எனவும்,
கொண்டாடினார்.

கலித்தொகை தலைவி (பா 80),

*''அத்தத்தா' என்னும் நின்*
*தேமொழி கேட்டல் இனிது'',*

*''கிளர்மணி ஆர்ப்பச் சாஅய்ச் சாஅய்ச் செல்லும்*
*தளர்நடை காண்டல் இனிது'',*

*''திங்கட் குழவி வருக என யான் நின்னை*
*அம்புலி காட்டல் இனிது'',*

எனத் தன் குழந்தையிடம் கூறுவது,

அவளின் மனப்புண் ஆற்றும் சஞ்சீவியாகவும் திகழ்வதை அறிய முடிகிறது.

பொருள் புரியாத மழலை அமுதத்தை விரும்பாதவரும் உளரோ?

*''நாவொடு நவிலா நகைபடு தீம்சொல்,*
*யாவரும் விழையும் பொலம்தொடிப் புதல்வன்''*

என்று எழுதி முத்திரையிட்டுத் தருகிறது (அகநானூறு 16.)

அதனால்தான் எல்லோரும் இளமையாக இருக்க விரும்புகின்றனர் போலும் ! 'இளமையின் இரகசியம் விளையாட்டே' என்னும் பழமொழியும் எழுந்தது.

கல்விச் சாலைகளிலும், மழலையர் வகுப்பு தோன்றி, முன்மழலை, இளமழலை, மழலை என மூன்று நிலை ஏற்றுள்ளது. ஔவையார் (புறநா. 92),

*யாழொடும் கொள்ளா பொழுதொடும் புணரா !*
*பொருள் அறிவாரா; ஆயினும், தந்தையர்க்கு*
*அருள் வந்தனவால், புதல்வர்தம் மழலை,''* என்றார்,

கயமனார்; (அகம் 219) தாய் சொல்வதாகப் பெண் குழந்தைக்குச் செல்லமாக ஊட்டி வளர்ப்பதைச் சொற் சித்திரமாக்கினார்:

*''சீர்கெழு வியன்நகர்ச் சிலம்புநக இயலி,*
*ஓரை ஆயமொடு பந்துசிறிது எறியினும்,*
*'வாராயோ' என்று ஏத்திப் பேர்இலைப்*
*பகன்றை வால்மலர் பனிநிறைந் ததுபோல்*
*பால்பெய் வள்ளம் சால்கை பற்றி,*
*'என்பாடு உண்டனை ஆயின், ஒருகால்,*
*நுந்தை பாடும்உண்' என்று ஊட்டி,*
*பிறந்ததற் கொண்டும் சிறந்தவை செய்துயான்*
*நலம்புனைந்து எடுத்தஎன் பொலந்தொடிக் குறுமகள்...''*

இவ்வாறெல்லாம் தான் காத்து வளர்த்த பெண் என்பதை மனத்திரையில் ஓடவிட்டுக் கண்ட பின்புலத்தில், அடுத்து அந்நிகழ்வு நாளன்று, சொல்லாமல் கொள்ளாமல் உறவினரை விட்டுப்பிரிந்து அறன் இல்லாதவனோடு உடன்போக்கை மேற்கொண்டு எங்கோ சென்று விட்டாளே என்பதை ஒப்பிட்டுப் பார்த்தபோது, அத்தாயின் மனம் அடையும் துடிப்பு, பாடலின் உச்சக் கட்ட உணர்வாகப் பொங்கித் ததும்புகிறது; மறக்க எண்ணினாலும் இயலவில்லை.

''பொன்கம்பிபோல் கூர்மையான வெண்பல் செந்நாய்க்கு அஞ்சிய கலைமான், விளாம்பழ ஓட்டுத்துளையில் கோடைக்காற்று நுழைந்து ஒலி எழக்கேட்டு, அதனை, ஆயர் குழலோசை என எண்ணிப்

பாதுகாப்புணர்வுடன் செல்லும். இத்தகைய வறண்ட நீள்வழியில், மெல்லியலாள் எவ்வாறு நடப்பாள்'' என எண்ணி வருந்துகிறாள் தாய் :

*''அறனி லாளனொடு இறந்தனள், இனி' என,*
*மறந்து அமைந்து இராஅ நெஞ்சம் நோவேன்....*
*நீர்இல் நீள்இடை.,*
*மடத்தகை மெலியச் சாஅய்,*
*நடக்கும்கொல்; என நோவல் யானே.''*

*''மாமன் அடித்தானோ மல்லிகைப்பூச் செண்டாலே அத்தை அடித்தாளோ அரளிப்பூச் செண்டாலே...''* என நாட்டுப்புறப் பாடல்வரி செல்லும்.

குழந்தை உணவு கொள்ளாத சமயம் அதனை அச்சுறுத்தி ஊட்ட சிறுகோல் வைத்திருந்தாலும் எந்நிலையிலும் எள் முனையளவும், கோலால் குழந்தைக்கு அடிபட்டுவிடக்கூடாது என்பதில் மிகவும் கவனமாக இருந்தனர்.

செவிலி, பொன் பாத்திரத்தில், தேனும் பாலும் கலந்து பிசைந்த மென்சோற்றை, ஒரு கையில் ஏந்தி, மறு கையில், நுனியில் பூச்சரம் சுற்றி மென்மையாக (பூப்பந்துபோல்) அமைக்கப்பட்ட கோலை ஏந்தி ''உண்'' என ஓங்க, குழந்தை த்த்தித் தத்தி ஓடி, வாசல் முல்லைப் பந்தர் கீழ்; விளையாட்டு காட்டும்.

பூச்சுற்றிய கோலை நமக்குக்காட்டும் (நற்றிணை 110) வரிகள் இதோ :

*'பிரசம் கலந்த வெண்சுவைத் தீம்பால்*
*விரிகதிர்ப் பொற்கலத்து ஒருகை ஏந்தி*
*புடைப்பின் சுற்றும் பூந்தலைச் சிறுகோல்,*
*உண் என்று ஓக்குபு பிழைப்ப,*
*தெண்நீர் முத்துஅரிப் பொற்சிலம்பு ஒலிப்பத் தத்துற்று*
*அரிநரைக் கூந்தற் செம்முது செவிலியர்*
*பரிமெலிந்து ஒழிய, பந்தர் ஓடி*
*ஏவல் மறுக்கும் சிறுவிளை யாட்டி....''*

ஆம்!. குழந்தையை வளர்த்தல் பொறுப்பும் பொறுமையும் அன்பும் மிக்க அரிய செயலாகும். அதனால்தான், நரி வெரூஉத்தலையார், சேரமான் கருவூரேறிய ஒள்வாள் கோப்பெருஞ் சேரலிரும்பொறையை, பாடாண் திணை அமையப்பாடும்போது (புறம். 5), ''குழவியை வளர்ப்பாரைப்போல, நீ, நாட்டைப் பாதுகாப்பாயாக!'' எனக் கூறுகிறார்.

*"காவல்....*

*குழவி கொள்பவரின் ஓம்புமதி..."*

பெண் குழந்தையைத்தான் வளர்த்த பெருமையை நற்றாய் (அகம் 195) நுட்பமுடனும், தக்க இடனறிந்தும் கூறுகிறாள்.

"(காண்பவருக்கும் பரவும்) இனிய புன்னகையுடைய அவளைப் பலநாள்களும், கூந்தலை வாரிமுடித்து, இடையின் மீது ஏற்றி, பாதுகாத்த, நன்மையுடைய உதவி பலவும் செய்தேன்." இக் கருத்தை உணர்த்தும் வரிகள் இவை....

*"இன்நகை முறுவல் ஏழையைப் பல்நாள்*
*கூந்தல் வாரி, நுசுப்பு இவர்ந்து, ஓம்பிய*
*நலம்புனை உதவியும் உடையன் மன்னே...."*

குழந்தை விளையாட்டைச் சிறுபாணாற்றுப்படை (55-62) அழகுறச் சித்திரிக்கிறது.

உப்புவாணிகர்தம் வண்டிவரிசையில் உடன் வந்தது பெண் குரங்கு. அது குழந்தைகளுடன் கிலுகிலுப்பை விளையாடியது. அந்த கிலுகிலுப்பை கிளிஞ்சல் கூட்டினுள் முத்துகளை இட்டுச் செய்ததாகும்.

அக்குழந்தைகள், தோளையும், இடையையும் மறைக்கும் நெடுங்கூந்தலை, "கொண்டை, குழல், பனிச்சை, அளகம், துஞ்சை" எனும் ஐவகையாக முடித்துள்ள (உப்பு வாணிகரின்) மகளிர் பெற்ற பிள்ளைகளாவர்!

*"நோன்பகட்(டு) உமணர் ஒழுகையொடு வந்த*
*மகாஅர் அன்ன மந்தி, மடவோர்*
*நகாஅர் அன்ன, நளிநீர் முத்தம்*
*வாள்வாய் எருந்தின் வயிற்றகத்து அடக்கி,*
*தோற்புறம் மறைக்கும், நல்கூர் நுசுப்பின்,*
*உளர்இயல் ஐம்பால் உமட்டியர் ஈன்ற*
*கிளர்பூண் புதல்வரொடு கிலுகிலி ஆடும்*
*தத்துநீர் வரைப்பின் கொற்கை.... - சிறுபாண்-(55-62)*

இன்றைக்கும் கிராமத்தில் பனங்குருத்தில் பிடிவைத்துப் பின்னி சிறு கற்களையிட்டுக் கிலுகிலுப்பையாக்கித் தந்தாலே, சிறுவர் முகத்தில் புன்னகை அரும்புகள் நிரம்பும். ஆனால், முத்துகளை இட்டு உருவாக்கிய கிளிஞ்சல் 'கிலுகிலி', இவ்விருபத்தொன்றாம் நூற்றாண்டில் கண்காட்சியில்கூடக் காணக்கிடைக்க வில்லையன்றோ? நற்றிணை

(331:4-8) பாடல் வரிகள் மூலமாக "உப்புக்குவியல்காயும் கடற்கரையில் விளையாடும் சிறுமிகள், காயும் மீன் கவரவரும் பறவைகளை ஓட்டுவர்; படகுகளை விளையாட்டு முறையில் எண்ணி, எண்களையும் கற்றதை நாம் உய்த்துணரலாம் :

*"புலவுமீன் உணங்கல் படுபுள் ஓப்பி,*
*மடநோக்கு ஆயமொடு உடன் ஊர்பு ஏறி,*
*'எந்தை திமில், இது நுந்தை திமில்' என*
*வளைநீர் வேட்டம் போகிய கிளைஞர்*
*திண்திமில் எண்ணும் தண்கடற் சேர்ப்ப !....."*

வரிகளில் எடுத்தியம்புகிறது :

*"இளமையும் காமமும் ஒராங்குப் பெற்றார்*
*வளமை விழைதக்கது உண்டோ....அரிது அரோ*
*சென்ற இளமை தரற்கு."*

சிறுவர் கிண்கிணி அணிதலையும், அவர் வாய் பவழமணிபோல் அழகுற விளங்குதலையும், வடம வண்ணக்கன் பேரிசாத்தனார் (புறநா. 198) உணர்த்தியுள்ளார் :

*"அருவி தாழ்ந்த பெருவரை போல*
*ஆரமொடு பொலிந்த மார்பில் தண்டா*
*கடவுள் சான்ற கற்பின், சேயிழை*
*மடவோள் பயந்த மணிமருள் அவ்வாய்க்*
*கிண்கிணிப் புதல்வர் பொலிக !"*

சிறுவர் அழுகையை மாற்ற தாயின் முயற்சிகளாக, மறப்புலியை வரவுசொல்லி அச்சமுறுத்துதல், அம்புலி காட்டுதல், அழுகை நில்லாமையின் "நின் பிதாவை நினைந்து வெறுத்தநின் செவ்வியைக் காட்டு" எனக் கூறுகிறாள் எனக்காட்டும் பா (குமணனைப் பெருஞ்சித்திரனார் பாடிய புறம். 160) :

*.................."இல்லுணர்த் துறத்தலின், இல்மறந்து உறையும்*
*புல்உளைக் குடுமிப்புதல்வன்.....*
*உள்இல் வறுங்காலம் திறந்து, அழக்கண்டு,*
*மறப்புலி உரைத்தும், மதியம் காட்டியும்,*
*நொந்தன ளாகி, 'நுந்தையை உள்ளி,*
*பொடிந்தநின் செவ்வி காட்டு' என...."*

குழந்தை அழுகையின் அடிப்படைக் காரணம், அதன் பசியை உடனடியாக ஆற்ற இயலா வறுமை நிலை. அதனால்தான் போலும், 'கொடிது கொடிது இளமையில் வறுமை' எனவும், 'வயிற்றுக்குச் சோறிட வேண்டும் இங்கு வாழும் மனிதருக் கெல்லாம்' எனவும் அழகு தமிழில் சொல்லி வைத்தனர்.

*''பொருளில்லான் இளமைபோல் புல்லென்றாள்....''*

எனக்கலித்தொகை (38-15) கூறும் வரி, இளமையில் வறுமை கொடியது என உணர்த்தும்.

குறுந்தொகை (161) பாடலில், நக்கீரர்,

*'புலிப்பல் தாலிப் புதல்வற் புல்லி'*

என்றார். பொன்னால் ஆன ஐம்படைத் தாலியைப் புதல்வன் அணிந்திருத்தலை, அகநானூறு (54) பாடல் வரிகளும் உணர்த்தும் :

*''முகிழ்நிலாத் திகழ்தரும் மூவாத் திங்கள் !*
*பொன்னுடைத் தாலி என்மகன் ஒற்றி,*
*வருகுவை ஆயின், தருகுவென் பால் என...''*

இனி, சோழன் கரிகாற் பெருவளத்தானைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடிய பட்டினப்பாலை, சிறுவர் சிறுதேர் உருட்டுதலை, நயமுற நமக்குக்காட்டும் பாங்கினைக் காண்போம் :

*''சுடர்நுதல், மட நோக்கின்,*
*நேர்இழை மகளிர் உணங்குஉணாக் கவரும்*
*கோழி எறிந்த கொடுங்காற் கனங்குழை,*
*பொற்காற் புதல்வர் புரவிஇன்று உருட்டும்,*
*முக்காற் சிறுதேர் முன்வழி விலக்கும்...''*

ஆக, பொன்னணி வழிவிலக்கும் செல்வவள முற்றத்தில் புதல்வர் சிறுதேர் உருட்டிய பாங்கு, உள்ளத்தில் உவகையூட்டுகிற தன்றோ? இச்சிறுதேர் தற்போது 'நடைவண்டி' என வழங்கப்படுகிறது.

*''குழந்தையும் தெய்வமும் ஒன்று;*
*குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே''*

என்றெல்லாம் பழமொழிகள் உள.

இளமையைக் கொண்டாடும் முகத்தான் எழுந்தவையே, பிள்ளைத் தமிழ்நூல்கள். 96 வகைச் சிற்றிலக்கியங்களுள், பலருடைய உள்ளத்தையும் கொள்ளைகொண்டு, அன்றுமுதல் இன்றுவரை, புதியன

உருவாகிக் கொண்டே இருக்கும் களனாகத்திகழ்வது, பிள்ளைத்தமிழ் இலக்கியம். குமரகுருபரர் ஒருவரே, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், முத்துக் குமாரசுவாமி பிள்ளைத் தமிழ் எனும் இருநூல்களையும் இயற்றியுள்ளதே, இவ்விலக்கியம் புலவர் நெஞ்சில் பெற்ற உயரிடத்தை அறியவைக்கும். சிற்றிலக்கியங்கள் 96 வகையை, வீரமாமுனிவரின் சதுரகராதி சுட்டுகிறது; இவற்றின் இலக்கணங்களைப் பன்னிருபாட்டியல் முதலாக சிதம்பரப் பாட்டியல் வரையாகவுள்ள பாட்டியல் நூல்கள் விவரிக்கின்றன. பிள்ளைத்தமிழின் இலக்கணமாகக் கூறப்பட்ட கருத்துகளின் தொகுப்பு :

கடவுளரையோ, அரசரையோ, பிறரையோ குழந்தையாகப் பாவித்து, அதனைப் பத்துப்பருவங்களாகப் பகுத்துக்கொண்டு, பருவத்துக்குப் பத்து ஆசிரிய விருத்தங்கள் அமையப்பாடுவதே பிள்ளைத்தமிழ் இலக்கியம். இவை தனித்தனிப் பாடல்களின் தொகுதி. முதல் ஏழு பருவங்கள் இருபாலர்க்கும் பொது; அடுத்த மூன்றும் வேறு வேறாக அமைந்து, இலக்கிய இன்பம் ஊட்டுவன.

**ஆண்பால் பிள்ளைத் தமிழ் 10 பருவங்களாவன :**

| | |
|---|---|
| 1. காப்பு | 6. வருகை |
| 2. செங்கீரை | 7. அம்புலி |
| 3. தால் | 8. சிற்றில் |
| 4. சப்பாணி | 9. சிறுபறை |
| 5. முத்தம் | 10. சிறுதேர் |

பெண்பாலுக்கு 8, 9, 10 ஆம் பருவங்கள், அம்மானை, நீராடல், ஊசல் என அமையும்.

இக்கட்டுரையில், அம்புலி காட்டலாக உள்ள, (கலி. 80, புற. 160, அக 54) மூன்று பாடல்களின் வரிகளையும், சிறுதேர் உருட்டுதலாக உள்ள (பட்டினப்பாலை 24-25) ஓர் இடமும், சங்க இலக்கியத்திலிருந்து கண்டு மகிழ்ந்தோம். முன்னரும் சிற்றில் இழைக்கும் வழக்கத்துக்கு ஓர் எடுத்துக்காட்டு காண்போம் :

*''கோடுவாய் கூடாப் பிறையை, பிறிது ஒன்று*
*நாடுவேன், கண்டனென், சிற்றிலுள் கண்டு.....''*

கலி. 142 (24-25)

ஆக, பிள்ளைத் தமிழ் நூல்களின்வேர், சங்க காலத்திலும், அவற்றின் வளர்ச்சி எட்டாம் நூற்றாண்டு தொடங்கியும், கருத்து மலர்களும் தத்துவக்

கனிகளும் கணினி யுகம் தொட்டும், மகிழ்வூட்டுவன எனில், மிகையாகாது.

சில பிள்ளைத் தமிழ் நூல்களிலிருந்து, முத்தமிழ்க் கூட்டினைச் சுவைப்போமா?

குமரகுருபரரின், முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்; செங்கீரைப் பருவம்; ஒருபாடல் :

(கீர் - சொல்; அரும்பு மழலையொலி ! தொட்டில்பிள்ளை, தலையை உயர்த்திக் கையால் ஊன்றி, உடம்பை அசைத்தலைச் செங்கீரையாடுதல் என்பர்.)

*விரல்சுவை யுண்டு கனிந்தமு தூறிய மெல்லிதழ் புலராமே*
*விம்மிப் பொருமி விழுந்தழு தலறியுன் மென்குரல் கம்மாமே*
*கரைவுறும் அஞ்சன நுண்டுளி சிந்திக் கண்மலர் சிவவாமே*
*கலுழ்கலு ழிப்புனல் அருவி படிந்துடல் கருவடி வுண்ணாமே*
*உருவ மணிச்சிறு தொட்டி லுதைத்துநி னொண்பத நோவாமே*
*ஒருதா ளுந்தி யெழுந்திரு கையும் ஒருங்கு பதித்துநிமிர்ந்*
*தருள்பொழி திருமுக மசைய வசைந்தினி தாடுக செங்கீரை*
*ஆதி வயித்திய நாத புரிக்குகன் ஆடுக செங்கீரை !*

இதில் வயித்தியநாதபுரி என்பது, புள்ளிருக்குவேளூர் (வைத்தீசுரன் கோயில்) தலத்தைக் குறித்தது.

கலுழ் - அழுகை

கலுழிப்புனல் - அஞ்சனம் (மை) கரைந்த கண்ணீர்.

குழந்தையின் சிறுநடையிலும், பெற்றோரும் சுற்றமும் முத்தம் தருமாறு வேண்டும் செய்திகூறல் முத்தப்பருவம். திருச்செந்தூர் (முருகன்) பிள்ளைத்தமிழ், பகழிக்கூத்தர் இயற்றிய நூலாகும். இதில், முத்தப் பருவப்பாடல் ஒன்று :

*கத்தும் தரங்கம் எடுத்தெறியக்*
*கடுஞ்சூல் உளைந்து வலம்புரிகள்*
*கரையில் தவழ்ந்து வானுலுகத்தில்*
*கான்ற மணிக்கு விலையுண்டு*

*தத்தும் கரட விகடதட*
*தந்திப் பிறைக்கூன் மருப்பில்விளை*
*தரளந் தனக்கு விலையுண்டு*
*தழைத்துக் கழுத்து வளைந்தமணிக்*
*கொத்துஞ் சுமந்த பசுஞ்சாலிக்*
*குளிர்முத் தினுக்கு விலையுண்டு*
*கொண்டல் தருநித் திலந்தனக்குக்*
*கூறுந் தரமுண் டுன்கனிவாய்*
*முத்தந் தனக்கு விலையில்லை*
*முருகா முத்தம் தருகவே*
*முத்தம் சொரியும் கடலலைவாய்*
*முதல்வா முத்தந் தருகவே !*

''பலவகை முத்துகளுக்கும் விலையுண்டு. ஆனால், கொவ்வைக்கனிபோல் சிவந்த வாயினையுடைய (குழந்தையாகிய) நீ தரும் முத்தத்துக்கு விலை கிடையாது (விலை மதிப்பற்ற உயர்வானது); ஆதலால், முத்துபோல் நீர்த்திவலை சிதறும் அலைமிக்க திருச்செந்தூர் கடற்கரையில் விளங்கும் முதல்வனாம் முருகா ! முத்தம்தருக !'' (சாலி - நெல்) வலம்புரிச்சங்கு, யானைத்தந்தம், நெல், மேகம், தாமரை, வாழை, கரும்பு, கமுகு, மூங்கில், நத்தை, உடும்பு, மீன், சிப்பி, முதலை, நிலா, பசு, பன்றி, நாகம், கொக்கு, மகளிர் என்பனவற்றுள், முத்துகள் தோன்றும் எனப்புலவர்கள் கூறும் இலக்கிய மரபறிந்து இயற்றிய சுவைமிகு பாடலன்றோ !

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, சங்கத்தமிழ் வளர்த்த பெருமைக்குரியது மதுரை. பொன். பாண்டித்துரைத் தேவர், சுற்றமும் நட்பும் சூழத் தமிழ்த்தொண்டு புரிய 1901ஆம் ஆண்டில் நிறுவிய (நான்காம்) தமிழ்ச்சங்கத்தின் இன்றும் தொடரும் நற்பணிகளால், செந்தமிழால், தமிழ்மாணவர்களின் நெஞ்சில் நீங்கா இடம் பெற்று விளங்குவது மதுரை. மதுரையில் அருளாட்சிசெய்யும் அன்னை மீனாட்சியைப் பாட்டுடைத் தலைவியாக (குழந்தையாக) க்கொண்டு, குமரகுருபரர் பாடிய, ''மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்'' நூலை, (மீனாட்சியம்மன்) திருக்கோவிலில் அரங்கேற்றம் செய்தார். வருகைப் பருவம், ''தொடுக்கும் கடவுள்...'' எனத் தொடங்கும் இப்பாடலின் பொருள்நயம் கூறிக்கொண்டிருந்தார். அப்போது, அன்னை மீனாட்சியே பெண்குழந்தை வடிவத்தில் வந்து குமரகுருபரருக்கு, மணிமாலையைப் பரிசளித்தார் என்பது, செவிவழிச் செய்தி !

பாடல் :

*"தொடுக்கும் கடவுள் பழம்பாடல்*
*தொடையின் பயனே ! நறைபழுத்த*
*துறைத்தீந் தமிழின் ஒழுகுநறுஞ்*
*சுவையே ! அகந்தைக் கிழங்கையகழ்ந்*
*தெடுக்கும் தொழும்பர் உளக்கோயிற்(கு)*
*ஏற்றும் விளக்கே ! வளர்சிமைய*
*இமயப் பொருப்பில் விளையாடும்*
*இளமென் பிடியே ! எறிதரங்கம்*
*உடுக்கும் புவனம் கடந்துநின்ற*
*ஒருவன் திருவுள் ளத்திலழகு*
*ஒழுக எழுதிப் பார்த்திருக்கும்*
*உயிரோ வியமே ! மதுகரம்வாய்*
*மடுக்கும் குழற்கா டேந்துமிள*
*வஞ்சிக் கொடியே ! வருகவே !*
*மலயத் துவசன் பெற்றபெரு*
*வாழ்வே ! வருக ! வருகவே !*

உதயத்திற்கு முன் கீழ்வானில் சூரியன் வெளிச்ச வெள்ளம் பாய்ச்சுவது போல, தம்வாழ்நாளில், பிற்காலத்தில், புகழ்பெற்று விளங்கியவர்கள், அதன் அறிகுறியை, இளமைப் பருவத்திலேயே உணர்த்தியுள்ளனர். எடுத்துக்காட்டாக, மூன்று நிகழ்வுகளைக் காண்போம்

**1. பாரதியார்**

இளமைப் பருவத்திலேயே, விடுதலைக்குயில் சுப்பிரமணிய பாரதியார், தமிழார்வம் மிக்கவராகவும், கவிதைபுனையும் திறன் உடையவராகவும் திகழ்ந்தார்.

குதிரை கொள் தின்றால் கழுதைக்கு வயிறு வலிக்குமாம் என்பது பழமொழியன்றோ?

அவரைக்கண்டு பொறாமைகொண்டவரும் இருந்தனர். காந்திமதிநாதன் என்பவர், 'பாரதி சின்னப் பயல்" என முடியுமாறு வெண்பா பாடச் சொன்னார்.

பாரதியாரோ சற்றும் தயங்காமல், தன்மேல் வீசப்பட்ட வேலைக் கையில் தடுத்துப்பற்றி, அதனையே பகைமேல் எறிந்து வெற்றி வாகை சூடும் மாவீரனைப் போல, நடந்துகொண்டார் ! எப்படி?

பொறாமை காரிருள்போல் நெஞ்சில் சூழ்ந்து, அன்பு வெளிச்சத்தை மறைக்கும், காந்திமதிநாதனைப்பார் + அதிசின்னப் பயல் - என்பது பொருளாக அமைந்து, இளமையிலேயே பாரதியார் பெற்ற திறமைக்கு ஓர் ஆவணம் ஆயிற்று.

**பாடல் :**

*ஆண்டில் இளையவனென் றந்தோ, அகந்தையினால்*
*ஈண்டிங் கிகழ்ந்தென்னை ஏளனஞ்செய் - மாண்பற்ற*
*காரிருள்போ லுள்ளத்தான் காந்திமதி நாதனைப்*
*பாரதி சின்னப் பயல்.*

இதே ஈற்றடியில் மற்றொரு பாடலையும்
பாரதியார் அன்பு ததும்பப் பாடினார்:

*ஆண்டி லிளையவனென் றைய, அருமையினால்*
*ஈண்டின்றென் றன்னைநீ யேந்தினையால் - மாண்புற்ற*
*காரதுபோ லுள்ளத்தான் காந்திமதி நாதற்குப்*
*பாரதி சின்னப் பயல்.*

**2. குமரகுருபர் :**

கந்தர்கலிவெண்பா முதல், சகலகலாவல்லிமாலை வரை பதினைந்துக்கும் குறையாத நூல்கள் இயற்றியும், காசிவரை சென்று அறம்வளர்த்தும் புகழுற்ற குமரகுருபரரும், இளமையில் பாடத்தொடங்கியவரே.

**3. இரவீந்திரநாததாகூர் :**

உலகின் புகழ்மிகு நோபெல் பரிசினைத் தம் கீதாஞ்சலி நூலுக்காகப் பெற்றும், சாந்திநிகேதன் மூலம் கல்வி வழங்கியும், புகழ்பெற்ற இரவீந்திரநாததாகூரும், இளம்பருவத்திலேயே கவிதை இயற்றத் தொடங்கியவர்தாம்.

**நிறைவுரை :**

இன்று மக்கள் தொகையில் 65% பேர் 25 வயதும் நிரம்பா இளையோரே ! ஆக, இலக்கியம் எத்தனை ஆயிரம் ஆண்டு பழைமை உடையதெனினும், அதிலுள்ள இளமை, அதன் மிடுக்கும் முறுக்கும் குன்றாமல் உள்ள நிலை மனம் கவர்ந்து மகிழ்வூட்டுகிறதன்றோ?

## இளமை, உலகின் வரம் !

கண்அசை வினில்கல் தூளாகும் !
காற்றும் பணிந்து ஊர்தியாகும் !
விண்ணெலாம் பரவிநில் வானவில்லும்
விரும்பிய ஆடலின் கருவியாகும் !
இளமை உலகம் இன்பகடல் ;
இனிய நட்பின் நெடுஞ்சாலை !
களவியல் கற்பியல் சுவடித்தேன்
கற்று மயங்கிடும் பட்டறையே !
கண்ணணிபசுங்கண் ணாடியைப்போல்,
காண்பன இளமை யால்இளமை !
கண்எதிர் மங்கை தேவதைதான் !
காதல் உற்றவட் கிவன்தேவன் !
கண்களும் பேசிடும் காதுபார்க்கும் !
கருத்துரை நாவோ அபிநயிக்கும் !
கண்மொழி, கண்வழி நெஞ்சுசேர்ந்து,
கணத்தில் இதயம் தேன்தடவும் !
தேன்குடித் தயர்ந்த வண்டினைப்போல்,
தம்செயல் மறந்திரு மனம்திகைக்கும் !
வான்,குடை யாகும் ! மழைதூறாம் !
வரும்இன் னல்எனில், துகள்துகளாம் !
உதட்டின் அசைவினில் ஓர்தமிழ்ப்பண்
உடன்கரு வாகி உதித்துநிற்கும் !
உதட்டுச் சுழிப்பினில் நிறப்பிரதி
உதிக்கும் கொவ்வைக் கனிகாட்டும் !
முளரி ஓங்கிடும் நிலைகண்டால்,
மூச்சில் வெம்மை கூடுவதை!
விளக்கும் அறிவியல் யாங்குளதோ?
விளக்கிடின்; மனங்கள் கசிந்திடுமோ?
இளமை உலகின் வரமாகும் !
இனியகற் பகமெனும் தருவாகும் !
குளம்நீர் நிறைநிகர் பற்றுகொண்டு,
குணத்தொடு, நாடு, மொழிகாப்போம் !

- புலவர் சி. பா.

# செம்மொழித் தமிழ் - தமிழ்ச் செம்மொழி

தமிழாகரர் தெ. முருகசாமி
புதுச்சேரி

செம்மொழித் தமிழ் என்றும், தமிழ்ச் செம்மொழி என்றும் எழுதும் அளவிலும் சொல்லும் அளவிலும் வேறுபாடுள்ளன போலப் பொருள் கூறும் அளவிலும் வேறுபாடுண்டு.

உலகில் செம்மொழிகளாகக் கருதப்படும் கிரேக்கம், இலத்தீன், சமஸ்கிருதம் போன்ற வரிசையில் தமிழும் ஒன்று என்ற பொருளைத் தருவது செம்மொழித் தமிழ். அங்ஙனமின்றித் தமிழின் இயல்பே செம்மைத் தன்மையானது என்ற தெளிவான பொருளைத் தருவது தமிழ்ச்செம்மொழி என்பதாகும்.

செந்தாமரைக்கு இனமாக வெண்டாமரை உள்ளது போலச் செஞ்சூரியனுக்கு இனமாக வேறொரு சூரியன் இல்லாததைப் போன்ற பொருள் வேறுபாட்டைத் தம்முள் கொண்டவையே, இந்தச் செம்மொழித் தமிழும் தமிழ்ச் செம்மொழியும் ஆகும்.

இக்கருத்து, தமிழிலக்கண உரையாசிரியர் வழி உணரப்பட்ட ஒன்றாகும். செஞ்ஞாயிறு என்பது தன்னோடு இயைபு இன்மை நீக்கிய விசேடணம் என்றும் செந்தாமரைக்கு இனமாக வெண்டாமரை உண்டென்பதால் அது பிறிதோடு இயைபு நீக்கிய விசேடணம் என்றும் நன்னூல் உரையாசிரியர் கூறினார்.

ஈண்டுத் த்ன்னோடு இயைபு இன்மை நீக்கிய விசேடணத்திற்கான எடுத்துக்காட்டுக்களாகச் செஞ்சூரியன், வெண்டிங்கள் என்ற இரண்டை மட்டுமே புலவர்கள் கூறுவதுண்டு. இவற்றோடு செந்தமிழ் என்ற சொல்லையும் கூறலாம். தமிழ், இயல்பாகவே செம்மைத் தன்மையுடைய காரணத்தால் அது செந்தமிழ் எனப்பட்டது.

நற்றமிழ், நறுந்தமிழ், பைந்தமிழ் போன்றவை செந்தமிழ் என்ற சொல்லுக்குரிய பொருட்புலப்பாட்டை விளக்கும் வேறு வேறு சொற்களன்றி அவை பிறிதோடு இயைபு நீக்கியதாகாதென்பது கருத்து. சூரியனுக்குள்ள செம்மை நிறம் மாறாத இயல்பைப் போன்றது தமிழுக்குள்ள செம்மைப் பண்பு. இங்ஙனம் பிரித்தறிய முடியாத பண்பால், இயற்கை உணர்வால் சூரியனைப் போலத் தமிழையும் தன்னேரில்லாததாக முன்னோர் கொண்டாடினர்.

*ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழ விளங்கி*
*எங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும் - ஆங்கவற்றுள்*
*மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது*
*தன்னே ரிலாத தமிழ்.*

உலகில் ஒரு சூரியன் மட்டுமே உண்டு. அது போலத் தமிழ் மட்டுமே உலகத் தமிழ் என்ற அடைமொழியைப் பெற்றது. உலகத்தமிழ் என்ற தொடர், உலக மொழிகள் பலவற்றுள் தமிழும் ஒன்று என்பதாக மட்டும் பொருள்படாமல் உலகம் முழுவதிலும் பரவியுள்ள தமிழ் என்ற தன்னேரில்லாத பொருளையும் தன்னுள் கொண்டது என்பது கருத்தாகும். உலகில் பல இனத்தவர்கள் வாழ்கின்றனர். அவர்களுள் தமிழர்களே பல நாடுகளில் பல இனத்தவர்களோடு சேர்ந்து வாழும் இயல்பினராக உள்ளனர் என்பதால் தமிழை உலகத் தமிழ் என்றது பொருந்தும் எனலாம். இந்த உயரிய சீறிய சிறப்புநோக்கியே உலகத் தமிழ் மாநாடு என்றதோர் அமைப்பு எந்த மொழிக்கும் அமையாமல் தமிழுக்கு மட்டுமே உருவானதைத் தமிழின் இயல்புக்கானதோர் இயற்கைச் சான்றாகக் கருதலாம்.

உலகத் தமிழ் என்பதற்கேற்ப உலகின் பல்வேறு மொழிகளில் தமிழின் தொடர்புகள் உள்ளன என்று மொழி நூலாரும், இலக்கிய இலக்கண நூலாரும், மானுடவியலாரும் உறுதிப்படுத்துகின்றனர். சுருக்கமாகச் சொன்னால் இன்றைய ஆஸ்திரேலிய, ஆசிய, ஆப்பிரிக்க, ஐரோப்பிய, மத்திய தரைக்கடல் நாடுகளின் மக்கள் யாவரும் நம் குமரிக் கண்டத்துத் தமிழர்களின் வாரிசுகளே எனத் தமிழர் சரித்திரம் எழுதிய ந.சி. கந்தையா பிள்ளை கூறுகிற கருத்தைப் புறந்தள்ளிவிட முடியாது. மேலும் பிள்ளை அவர்களைப் போலவே இந்தியாவின் கற்காலம் என்ற நூல் எழுதிய பி.டி. சீனிவாச ஐயங்கார் "இந்தியா முழுவதிலும் வழங்கிய மொழி தமிழ்" என்கிறார்.

பின்லாந்து பேராசிரியர் பர்போலா என்பவர் சிந்து சமவெளி நாகரிக வாழ்க்கை முற்றிலும் தமிழருடையது என்கிறார். அவர் கருத்துப்படி ஹரப்பா, மொகஞ்சோதாராவின் அகழ்வாராய்ச்சிப் பணிகள் பத்தில் ஒரு பங்கு கூட முழுமையாக அறியப்படாத நிலையில், கிடைத்துள்ள சான்றுகளைக் கொண்டு நோக்கினால் சிந்து சமவெளி வாழ்க்கை தமிழருடையது என்றால் இன்னும் தேடிக்கண்டுபிடித்தால் கிடைக்கும் ஆதாரங்களைக் கொண்டு எத்தகைய வாழ்வு தமிழருடையது என்பது துல்லியமாகத் தெரிய வருமன்றோ ! இவ்வாறே தமிழகத்திலும்

அகழ்வாராய்ச்சிப் பணி முழுமையாகக் கண்டறியப்படும் நிலையில் இன்னும் பல பேருண்மைகள் தெரியவரும் என்பதில் ஐயமில்லை.

இப்படிப்பட்ட அகழ்வாராய்ச்சிகளைப் போல மொழியளவிலும் ஒன்றைக் கூறலாம், நன்னூல் என்ற இலக்கண நூலை மட்டுமே கண்ட கால்டுவெல்லார் தமிழை உயர்தனிச் செம்மொழி என்றார். அவருக்குத் தொல்காப்பியம் கிடைத்திருக்குமாயின் உலக மொழிக்கெல்லாம் தமிழே தாய்மொழி என ஓங்கி முழக்கமிட்டிருப்பார் என்பதில் ஐயமில்லை.

மேலும் கடல் கொண்ட நூல்கள் எல்லாம் இருந்திருக்குமானால் தமிழ் மொழிக்குறிய செம்மொழிச் சிறப்பைப் பன்னூறு ஆண்டுக்கு முன்பே தமிழ் பெற்றிருக்கும் என்பதிலும் அட்டியில்லை, இதையே வேறு வகையாகச் சொன்னால் கடல் கொண்டவைபோக எஞ்சியுள்ள நூற்பரப்பே தமிழுக்கு இத்தகு சிறப்பைத் தந்துள்ளதெனில் கடல் கொண்டவையாவும் கிடைத்துவிடுமாயின் இன்னும் பன் மடங்கான பெருமை தமிழுக்குக் கூடுமன்றோ ! என்பதே உண்மை.

இவ்வாறாக ஆயிரமாயிரம் ஆண்டுகளாக உள்ள இலக்கண இலக்கியப் பரப்பும் பேச எழுதவுமான எளிமையும், இனிமையும், இசைத் தன்மையான ஓசை நெகிழ்வும், கருத்துச் செறிவும், செழுமையும், தூய்மையும் எச்சார்வும் இன்றித் தனித்தியங்கும் ஆற்றலும், பிறமொழிக்கெல்லாம் தாயாம் தன்மையும் கொண்டவற்றையெல்லாம் உணரும் போது தமிழ் மட்டுமே உயர் தனிச் செம்மொழியான தெய்வீகம் பெற்றது எனலாம். அதனால் தான் தமிழ் 'தெய்வத் தமிழ்' எனப்பட்டது போலும் ! இவ்வுண்மையைத் தெய்வச் சேக்கிழார் "ஞாலம் அளந்த ஒண்தீந் தமிழ்" என்றார். மதுரைப் பரஞ்சோதிமுனிவரும்,

*கண்ணுதற் பெருங்கடவுளும்*
*கழகமோ டமர்ந்து*
*பண்ணுறத் தெரிந்தாய்ந்தவிப்*
*பசுந்தமிழ் ஏனை*
*மண்ணிடைச் சில இலக்கண*
*வரம்பிலா மொழிபோல்*
*எண்ணிடப் படக்கிடந்ததா*
*எண்ணவும் படுமோ?*

எனத் தெய்வத்தோடு தமிழைச் சார்த்திப் புகழ்ந்தார். மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை உலகைப் படைத்தளித்துத் துடைக்கும் எல்லையறு பரம்

பொருள்போலத் தமிழும் முன்னைப் பழமைக்குப் பழமையும் பின்னைப் புதுமைக்குப் புதுமையாயிருப்பது என்றார். தமிழ்ச் செம்மல் வ.சுப. மாணிக்கனார் 'பிறப்பறியாத் தமிழ் என்றும் 'தெய்வம் நிகர் தமிழ்' என்றும் கூறினார். இப்படிச் சங்கத் தமிழ் போலச் சமயத் தமிழும் தமிழைச் செம்மொழியாக்கும் பங்களிப்பைச் செய்துள்ளது எனலாம்.

இந்த உண்மைகளையெல்லாம் கூட்டி மொழிந்த அளவில்தான் மகாகவி பாரதியாரும் 'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்' என்றார். எனவே திருந்திய பண்பும், சீர்த்த கீர்த்தியும், தூய்மையும், தனித்த விழுமியங்களையும், தொன்மை நூற்பரப்பும், எளிய இனிய சொற்பதங்களும், பொருள் முடிவுகளும் கொண்டதாய், பழையன கழித்துப் புதியன ஏற்கும் பண்பையெல்லாம் ஒருங்கே கொண்டது தமிழ் எனலாம். இத்தகு தமிழின் அடிப்படைக் கருத்து உலகளாவிய பார்வையுடையது. இதற்கான அடையாளந்தான் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற செம்மொழித் தொடர், பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற அய்யன் திருவள்ளுவர் தொடர், இவைகளெல்லாம் தமிழில் தோன்றினாலும் உலகந்தழுவிய மானுடவியல் முழுமைக்குமான தொடர்களாகும். இவைகள் தோன்றிய காலத்தில் எவ்வாறு மக்களைத் தம் வசப்படுத்தி ஈர்த்தனவோ அதே வேகத்தில் இன்றும் வீறுடன் விளங்குகின்றன. இனியும் விளங்கும் என்பதில் ஐயமில்லை.

ஆக, காலத்தால் அழியாதது மட்டுமின்றிக் காலத்தை வென்று நிற்கும் செம்மொழிப் பண்பில் தமிழுக்குள்ள இடம் மகுடமானதாகும். ஏனெனில் செம்மொழித் தகுதியுடைய சமஸ்கிருதம் வழக்கிழந்த மொழியாகி விட்டது. கிரேக்கம் இலத்தீன் மொழிகள் தம் நிலையில் தாழ்ந்து சுருங்கிவிட்டன. இத்தகு குறைபாடுகள் ஏதுமின்றித் தனித்தியங்கும் நம் தமிழ்தான் செம்மொழிக்கென வரையறுக்கப்பட்ட விதிகள் அனைத்தும் தொட்ட இடமெல்லாம் மணக்கும் துளசி போல் முற்றிலும் பொருந்துவதாக உள்ளது எனலாம்.

இவ்வாறாக உலக மொழிகளைத் தேர்ந்து தெளியும் போது பழம் பெருமைகளோடு காலத்துக்கேற்ற விஞ்ஞானப் புதுவரவுகளை ஏற்கும் இணையதள நாகரிக வளர்ச்சிக்குத் தன்னை ஆயத்தப்படுத்திக் கொண்டது தமிழ் என்பதால் இவ்வுண்மையை உலக மானிட இதய தள வலையில் பதிவு செய்து உயர்த்திக் காட்டும் பிரகடனமாக அமைந்ததுதான் கோவை உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடாகும்.

செம்மொழியாம் தமிழ்ச் செம்மொழி இன்று காணும் இணையதளப் புதுமைகளையெல்லாம் காணவேண்டுமென ஒரு நூற்றாண்டுக்கு

முன்னரே கனவு கண்டோர் பலர். பரிதிமாற் கலைஞர், பாண்டித்துரைத் தேவர், ஞானியார் அடிகள், மறைமலையடிகள், பாவாணர், தவத்திரு குன்றக்குடி அடிகள் போன்றோரின் பெயர்ப் பட்டியலில் இடம் பிடித்தவர் நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளையும் ஒருவராவார். அவர்தான் தமிழுக்குத் திருமுடி சூட்டிடுவோம் என இசைத்தமிழால் கனவுகண்ட கொங்கு நாட்டுக் கவிஞராவார். பாம்பறியும் பாம்பின்கால் என்பதற்கேற்பக் கனவு மெய்ப்பட வேண்டும் என்ற பாரதியின் கூற்றுப்படிக் கொங்கு மண்டலக் கோவையில் தமிழ்ச் செம்மொழி மகுடம் சூட்டிக் கொள்வது பொருத்தமும் பெருத்த சிறப்பும் ஆகும். நாமக்கல்லாரின் செம்மொழி மகுடப்பாட்டை முத்தமிழறிஞர் தமிழின முதல்வர் கலைஞர் அவர்களின் பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற செம்மொழி மாநாட்டுப் பாட்டோடு பாடி இன்புறுவோமாக !

*திருமுடி சூட்டிடுவோம் !*
*தெய்வத் தமிழ்மொழிக்குத்*
*திருமுடி சூட்டிடுவோம் !*
*வருமொழி எவருக்கும் வாரிக்கொடுத்துதவி*
***வண்மை நிறைந்த தமிழ் உண்மை உலகறிய !....***

(திருமுடி)

*பெற்றவளை மறந்து மற்றவரைத் தொழுத*
*பேதமை செய்து விட்டோம் ஆதலினால் நம் அன்னை*
*உற்ற அறமிழந்து உரிமைபெருமை குன்றி*
*உண்மை வெதும்பினதால் பிள்ளைகள் சீர்குலைந்தோம் !*

(திருமுடி)

*தாயின் மனம் குளிர்ந்தால் தயவதுவே நமக்குத்*
*தாரணி தன்னில் நம்மை யாரினிமேல் இகழ்வார்*
*நோயும் நொடியும் விட்டு நுண்ணுணர்வோடு நல்ல*
*நாலும் கலைகளெல்லாம் மேலும் மேலும் வளர்ப்போம் !*

(திருமுடி)

* * *

# சங்க இலக்கியங்களில் மொழி சாராக் கருத்துப் பரிமாற்றம்

முனைவர் வீ. ரேணுகாதேவி
மதுரை

கருத்துப் பரிமாற்றம் என்பது ஒருவர் தான் படித்ததை, கேட்டதை, உணர்ந்ததை தகவல்களாக சிலக் குறியீடுகளைப் பயன்படுத்தி ஊடகங்களின் வழியாக பிறருக்குத் தெரிவிப்பது ஆகும். தகவல் பெற்றவர் எதிர்வினையாற்றினால் அக்கருத்துப் பரிமாற்றம் முழுமையானதாகக் கருதப்படும். கல்வியல் சிந்தனைகளில் இக்கருத்துப் பரிமாற்றமும் அடக்கம். கருத்துப் பெட்டகங்களான சங்க இலக்கியங்களில் கருத்துப் பரிமாற்றம் பற்றியச் செய்திகள் ஆங்காங்கே காணப்படுகின்றன. அவற்றை நவீன கருத்துப் பரிமாற்றக் கோட்பாடுகளுடன் ஒப்பிட்டு ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

கருத்துப் பரிமாற்றம் இரு வகைகளில் நடைபெறுகின்றது. (1) மொழி சார்ந்த கருத்துப் பரிமாற்றம் (Verbal communication) (2) மொழிசாராக் கருத்துப் பரிமாற்றம் (Non-verbal communication). சங்க இலக்கியங்களில் இவ்விருவகைப் பற்றிய செய்திகள் காணப்பெறினும் இங்கு திருக்குறள், குறுந்தொகை ஆகிய இரு இலக்கியங்களில் காணப்பெறும் மொழி சாராக் கருத்துப் பரிமாற்றம் பற்றிய செய்திகள் மட்டுமே இக்கட்டுரையில் பேசப்படுகின்றது.

ஆதி மனிதன் தன் எண்ணங்களையும், கருத்துக்களையும் பிறருக்குத் தெரிவிக்க குரல் ஒலிகளையும், அங்க அசைவுகளையும் பயன்படுத்தினான். நாகரிகத்தின் விளைவாக மொழியைக் கற்றுக்கொண்ட மனிதன் தன் அறிவு சார்ந்த எண்ணங்களையும், கருத்துக்களையும் வளர்ந்து வரும் தம் தலைமுறையினர்க்குத் தர நினைத்தான். அதனால் மொழியைக் கல்வெட்டுக்களிலும், ஓவியங்களிலும், ஓலைச் சுவடிகளிலும் பதிப்பித்தான்.

நம் சமூகத்தில் பறை அறிவித்து ஊர் மக்களுக்குச் செய்தியைக் கூறுபவர் 'வள்ளுவன்' என்று அழைக்கப்பட்டார். கிரேக்க நாட்டில் செய்தி அறிவிப்பாளர்களை 'ஹெரால்ட்' என்று கூறினர்.

பறை, முரசு ஆகியன செய்தி அறிவிப்பின் முன்னோடிகளாக இருப்பதால் தான் இன்றும் நாளிதழ்கள் முரசொலி, மாலைமுரசு, தமிழ் முரசு என்னும் பெயர்களால் அழைக்கப்படுகின்றன. முரசறைதலும், சங்கொலித்தலும், தண்டோரா போடுதலும் செய்தியின் தன்மையினை நமக்கு எடுத்துரைக்கும்.

தண்டோராப் போடுதல் என்பது ஒரு குறிப்பிட்ட செய்தி அறிவிப்பின் முன்னோடியாகும். முரசறைதல் என்பது அரசு தொடர்பான செய்தி அறிவிப்பின் முன்னோடியாகும். சங்கொலித்தல் என்பது ஊர் மக்கள் தொடர்பான செய்தி அறிவிப்பின் முன்னோடியாகும்.

பண்டைக் காலத்தில் மணவீடுகளில் முழவும், மரண வீடுகளில் சங்கும், கோயில்களில் மணியோசையும் கூட்டத்தைக் கூட்ட அழைப்பொலிகளாக பயன்பட்டன. இன்றும் பால்காரன் தம் வருகையை உணர்த்த மணியொலியை எழுப்பிக் கொண்டே வருகிறான்.

சிலப்பதிகாரத்தில் கோவலன், கண்ணகி திருமணச் செய்தியினைப் பெண்கள் யானை மீது அமர்ந்து முரசொலித்து அறிவித்தார்கள் என்பதை

*'இருபெருங் குரவரும் ஒருபெருநகளால்*
*ணஅணிகளான மகிழ்ந்தனர், மகிழ்ந்துழி*
*யானை எருத்தத்து அணியிழையார் மேல் இரீஇ*
*மாநகர்க்கு ஈந்தார் மணம்*

(சிலம்பு - புகார் - மங்களவாழ்த்து - 36 - 43)

என்னும் பாடல் வரிகளால் அறியலாம்.

மேலும், கலித்தொகை பாடலொன்றில் மதம் பிடித்த யானையொன்றினை ஆற்றிற்குக் கூட்டிச் செல்வதை முன் கூட்டியே பறையறைந்து தெரிவிக்காதது அரசரின் குற்றம் எனும் பொருளில்

*பறையறைந் தல்லது செல்லறிக என்ன*
*இறையோன் தவறுடையான்* (குறிஞ்சிக்கலி - 20)

என்னும் பாடல் அமைந்துள்ளது.

முரசு, சங்கு, தண்டோரா போன்ற இசைக்கருவிகளைப் பயன்படுத்தி மக்களுக்கு தகவல்களைத் தெரியப்படுத்தினார் என்பது மேற்கூரிய பாடல் வரிகளால் அறியலாம்.

மனிதன் தம் கருத்துக்களை 93 விழுக்காடுகள் மொழி சாராக் குறியீடுகள் வழியும் 7 விழுக்காடுகள் மொழிக் குறியீடுகள் வழியும் தெரிவிக்கின்றான். மொழிசாராக் கருத்துப்பரிமாற்றம் என்பது உடல் உறுப்புக்களான முகம், கண், உடலமைப்பு, கால், கை போன்றவற்றையும் வண்ணங்கள், வரைபடங்கள், கொடிகள் போன்றவற்றையும் குறியீடுகளாகப் பயன்படுத்தி செய்தியினைத் தெரிவிப்பதாகும்.

*பீர் அலர் அணிகொண்ட பிறைநுதல் அல்லாக்கால்*
*அணிவனப்பு இழந்ததன் அணை மென் தோள் அல்லாக்கால்*
*நின்று நிர்வகக் கலுழும் நெடும் பெருங்கன் அல்லாக்கால்*
(நெய்தல் கலி)

இப்பாடல் தலைவியின் மன உணர்வு எவ்வாறு உள்ளது என்பதை சிலக் குறியீடுகள் வழியாக வெளிப்படுத்துகின்றது. தலைவன் தலைவியைப் பிரிந்து சென்றான். அப்பிரிவுத் துயரினை ஒளி இழந்து போன நெற்றியும், அழகிழந்த தோளும், நீர் சொரிய அழும் கண்களும் உணர்த்துகின்றன. தலைவியின் துன்ப நிலையை இக்குறியீடுகள் வெளிப்படுத்துகின்றன. இங்கு சொற்களின்றி நெற்றி, தோள், கண் இவையே செய்தியினை உணர்த்தப் பயன்பட்டக் குறியீடுகள் எனவே இஃது மொழி சாராக் கருத்துப் பரிமாற்றம் எனப்படும்.

மொழி சாராக் கருத்துப் பரிமாற்றம் நான்கு வகை குறியங்களின் வழி நிகழ்த்தப்படுகின்றது. பெரும்பாலும் உடல் மொழி, உடலசைவு மொழி, சைகை மொழி என்றே பேசப்பட்டாலும், இவற்றையும் தாண்டி கலைப்பொருட்கள், சித்திரங்கள், வரைபடங்கள், இடம், காலம், இவற்றின் வழியாகவும் மொழிசாராக் கருத்துப் பரிமாற்றம் நிகழ்த்தப்படுகின்றது.

மொழி சாராக் கருத்துப் பரிமாற்றக் குறியங்கள் நான்கு வகைப்படும். அவை.

*1) செய்தல் குறியங்கள் (Peformance codes)*

*2) கலைப் பொருள் குறியங்கள் (Artifactual codes)*

*3) சித்திரக் குறியங்கள் (Mediatory codes)*

*4) இடம், காலக் குறியங்கள் (Spatio-Temporal codes)*

## செய்தல் குறியங்கள்

செய்தல் குறியங்கள் என்பது பெரும்பாலும் கை, கால், கண், முகம் மூக்கு போன்ற உடல் உறுப்புக்களால் நிகழ்த்தப்படும் அசைவுகளைக் குறியீடுகளாகக் கொண்டு ஒரு செய்தியை / கருத்தைப் பிறருக்கு உணர்த்துவதாகும். தகவல் தொடர்புத் துறையினரால் இது உடல் மொழி என்று குறிப்பிடப்படுகின்றது.

ஒருவரின் உள்ளத்தில் மகிழ்ச்சி இருந்தாலும், அல்லது துக்கம் இருந்தாலும் அதை மறைத்துக் கொள்ள முடியாது. எவ்வாறேனும் அது வெளிப்பட்டு விடும். முகமோ, கண்ணோ, உடலோ அச்செய்தியை வெளிப்படுத்தி விடும். தொல்காப்பியர், மெய்பாட்டியல் எனும் ஒரு இயலையே வகுத்துள்ளார். 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்னும் பழமொழியும் கண்கள் பேசிக் கொள்ளும் போது வாய்ச்சொற்களினால் பயன் ஒன்றும் இல்லை என்னும் வள்ளுவரின் கூற்றும் செய்தற் குறியத்திற்கு சிறந்த சான்றுகள் ஆகும்.

தலைவன் களவு, கற்பு வாழ்க்கையின் போது தலைவியை விட்டுப் பிரிந்து செல்ல நேரிடும். அந்நிலையில் தலைவனின் உடலில் பிரிவாற்றமையினால் பல மாற்றங்கள் ஏற்படுகின்றன. உடல் மெலிவுறுதல், கை வளையல் கழறல், உடம்பில் நெற்றியில் பசலை பாய்தல், கண்ணீர் மல்குதல் போன்ற மாற்றங்கள் நிகழ்கின்றன. இம்மாற்றங்களின் வழியாக தலைவி தான் துயறுற்று இருக்கின்றேன் எனக் கூறாமலேயே பிறர் அறிந்து கொள்ள முடிகின்றது. இவை செய்தற் குறியங்களுக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

*'எனக்கும் ஆகாது என்ஐக்கும் உதவாது*
*பசலை உணீஇயர் வேண்டும்*
*திதியை அல்குல் எம்மாமைக்கலினே'* (குறுந். 27)

தலைவன் பிரிந்து சென்றதனால் தலைவியின் மேனியானது பசலை படர்ந்து தனக்கும் ஆகாது, தலைவனுக்கும் ஆகாது வீணாகின்றது எனத் தலைவி புலம்புவதாக உள்ளது. இப்புலம்பலை தோழி வெளிப்படையாக கேட்காவிடினும் தலைவியினது பசலை படர்ந்த மேனி அவளுடைய பிரிவாற்றாமைம்யை வெளிப்படுத்தி விடுகின்றது. இங்கு தலைவியின் பசலை படர்ந்த உடம்பு செய்தற் குறியமாகின்றது.

*ஊர் உண் கேணி உண் துறைத் தொக்க*
*பாசி அற்றே பசலை, காதலர்*
*தொடுவுழித் தொடுவுழி நீங்கி,*
*விடுவுழி விடுவிழிப் பரத்தலானே'* (குறுந்.379)

என்னும் குறுந்தொகைப் பாடலும் தலைவியின் பிரிவாற்றாமை என்னும் துயரை பசலை படர்ந்த மேனி வெளிப்படுத்துவதை எடுத்துரைக்கின்றது.

*நயந்தவர் நல்காமை சொல்லுவபோலும்*
*பசந்து பனிவாகும் கண்* (குறள் : 1232)

பசலை படர்ந்து, நீர் நிறைந்த கண்ணே காதலரின் பிரிவினை அறிவிப்பது போல் காணப்படுகின்றது. பசலை படர்ந்த உடலும், நீர் நிறைந்த கண்களும் பிரிவின் துயரை பிறருக்கு உரைக்கும் குறியங்களாக செயல்படுகின்றன.

*கொடியார் கொடுமை உரைக்கும் தொடியொடு*
*தொல் கவின் வாடிய தோள்* (குறள் : 1235)

கழன்று விழுகின்ற வளையல்கள் கொடியவரின் தலைவனின் கொடுமையைப் புலப்படுத்துகின்றன.

*கண்ணின் பசப்போ பருவரல் எய்தின்றே*
*ஒண்ணுதல் செய்தது கண்டு* (குறள் : 1240)


நெற்றியின் பசலை கண்டு, கண்ணின் பசலை கலங்கியது அதாவது காதலியின் ஒளிபொருந்திய நெற்றி பசந்தது கண்டு, அவளது கண்ணில் படர்ந்த பசலையும் துன்புற்றது. தலைவன் பிரிந்து சென்றதால் ஏற்பட்ட துயரத்தை தலைவியின் பசலை படர்ந்த நெற்றியும், கண்களும் போட்டி போட்டுக்கொண்டு பிறருக்குத் தெரிவிக்கின்றன.

*அரப்பினும் கையிகந்து ஒல்லாளின் உண்கண்*
*உரைக்க லுறுவதொன்று உண்டு* (குறள் : 1271)

பெண்ணே ! நீ சொல்ல வேண்டியதைச் சொல்லாமல் மறைக்கிறாய். ஆனால் நீ மறைத்தாலும் அதனையும் மீறி உனது மையுண்ட கண்கள் எனக்குச் சொல்லுகின்ற செய்தி ஒன்று உண்டு. அதாவது தலைவி தனக்கே உரிய நாணத்தின் காரணமாக தன்னுடைய இச்சையை வாய்விட்டு சொல்லாவிட்டாலும் அவளுடைய மையுண்ட கண்கள் அச்செய்தியைக் குறிப்பால் உணர்த்தி விடுகின்றன.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

# பயங்கரவாதிகளை பாகிஸ்தான் கட்டுப்படுத்த வேண்டும்



## ஒபாமாவிடம் மன்மோகன் வலியுறுத்தல்

டொரன்டோ, ஜூன் 28 : இந்தியாவுக்கு எதிரான பயங்கரவாதச் செயல்களை பாகிஸ்தான் ஊக்குவிப்பதை நிறுத்த வேண்டும் என்று பிரதமர் மன்மோகன் சிங்க வலியுறுத்தியுள்ளார்.

ஜி-20 மாநாட்டில் பங்கேற்பதற்காக டொரன்டோ வந்துள்ள அவர், அமெரிக்க அதிபர் ஒபாமாவை சந்தித்துப் பேசினார். இரு தலைவர்களிடையிலான பேச்சு 30 நிமிஷம் நீடித்தது. அப்போது பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து இரு தலைவர்களும் விரிவாகப் பேசினர்.

இரு தலைவர்களிடையிலான பேச்சுவார்த்தை குறித்து இந்திய வெளியுறவுச் செயலர் நிருபமாராவ், செய்தியாளர்களிடம் கூறியது :

ஆப்கானிஸ்தானில் பயங்கரவாதத்துக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்தும் அங்கு அமைதியான சூழல் ஏற்பட எடுக்கப்படும் நடவடிக்கை குறித்தும் பிரதமர் மன்மோகன் சிங், அமெரிக்க அதிபர் ஒபாமாவுடன் விவாதித்தார்.

மும்பையில் தாக்குதலுக்குப் பிறகு பாகிஸ்தானுடன் அமைதி நடவடிக்கையை இந்தியா மேற்கொண்டுள்ளது. இருப்பினும் இந்தியாவுக்கு அளித்த உறுதி மொழியை பாகிஸ்தான் கட்டாயம் நிறைவேற்ற வேண்டும். அதாவது இந்தியாவுக்கு எதிரான எத்தகைய பயங்கரவாத அமைப்புகளும் பாகிஸ்தான் மண்ணில் செயல்பட அனுமதிக்கக் கூடாது என்பதே அது.

சிகாகோவில் கைது செய்யப்பட்டு சிறையில் உள்ள டேவிட் கோல்மென் ஹெட்லி விவகாரமும் இரு தலைவர்களிடையிலான விவாதத்தில் இடம்பெற்றது.

பாகிஸ்தானுடனான அமைதி பேச்சுவார்த்தையில் இந்தியா மட்டும் ஆர்வம் காட்டுவதில் எவ்வித பயனும் ஏற்படாது, இப்பிராந்தியத்தில் பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்துவதில் பாகிஸ்தானும் முனைப்புடன் செயல்பட வேண்டும் என்று ஒபாமாவிடம் பிரதமர் மன்மோகன் சிங் உறுதிபடத் தெரிவித்தார்.

யூனியன் கார்பைடு முன்னாள் தலைவர் வாரன் ஆண்டர்சனை இந்தியாவுக்கு கொண்டு வருவது குறித்து பிரதமர் மன்மோகன்சிங் அமெரிக்க அதிபர் ஒபாமாவுடன் பேசவில்லை என்று நிருபர் ராவ் கூறினார்.

லஷ்கர்-இ-தொய்பா அமைப்பின் தலைவர் ஹபீஸ் சயீத் போன்றவர்களை பாகிஸ்தானாலோ அல்லது இந்தியானாலோ கட்டுப்படுத்த இயலாது என்று பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் ரெஹ்மான் மாலிக் கூறியிருப்பது குறித்து கேட்டதற்கு, இரு நாடுகளிடையிலான நட்புறவுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் சயீத் போன்ற பயங்கரவாதிகளை பாகிஸ்தானால் கட்டுப்படுத்த முடியும், என்று அவர் மேலும் கூறினார். சமீபத்தில் பாகிஸ்தான் சென்ற மத்திய உள்துறை அமைச்சர் ப. சிதம்பரம், சயீத் போன்ற பயங்கரவாதிகளின் நடவடிக்கைகளைக் கண் காணிக்க வேண்டும் என்று பாகிஸ்தான் அதிகாரிகளிடம் கூறியதையும் நிருபமா சுட்டிக் காட்டினார். இத்தகைய பயங்கரவாதிகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சிதம்பரம் வலியுறுத்தியுள்ளார்.

இந்தியா, அமெரிக்கா இடையிலான பரஸ்பர ஒத்துழைப்பு குறித்து இரு தலைவர்களும் திருப்தி தெரிவித்தனர். அமெரிக்க அதிபரின் இந்திய வருகையை மிகுந்த ஆவலுடன் தாம் எதிர்பார்ப்பதாக மன்மோகன் தெரிவித்தார். அதிபருடன் வருகை தரும் அவரது மனைவி மற்றும் குடும்பத்தினருக்கு சிறப்பான வரவேற்பு தயாராகி வருவதாக மன்மோகன் குறிப்பிட்டார்.

மிகச்சிறந்த நண்பராக மட்டுமின்றி சிறந்த பொருளாதார நிபுணராகவும் மன்மோகன் சிங்கை பார்ப்பதாக ஒபாமா குறிப்பிட்டார். இந்தியாவின் வளர்ச்சி மட்டுமின்றி பிற நாடுகளின் வளர்ச்சியிலும் அக்கறை செலுத்துவதாக அவர் குறிப்பிட்டார். அமெரிக்க பொருளாதார தேக்க நிலையின் போது, அதிலிருந்து மீள உபயோகமான ஆலோசனைகளை அளித்தவர் மன்மோகன் சிங், என்று ஒபாமா கூறினார்.

இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்ய வேண்டும் என்ற பிரதமரின் கோரிக்கையை ஏற்று இந்த ஆண்டு நவம்பரில் இந்தியா செல்லவுள்ளதாக ஒபாமாக குறிப்பிட்டார்.

பிரதமரும் அவரது மனைவியும் எங்களுக்கு சிறந்த விருந்து அளிப்பார்கள் என்று எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டார். இந்தியாவின் கலாசாரங்களையும் பாரம்பரிய விஷயங்களையும், விருந்தோம்பலையும் அறிய ஆவலுடன் உள்ளதாக ஒபாமா குறிப்பிட்டார்.

ஜி-20 மாநாட்டில் அனைத்து நாடுகளின் தலைவர்களும் இந்திய பிரதமர் மன்மோகன் சிங்கின் பேச்சை மிகவும் கூர்ந்து கவனித்தனர். பொருளாதார விவகாரங்களில் அவருக்குள்ள முதிர்ச்சியும் அனுபவத்தையும் அனைத்து நாடுகளின் தலைவர்களும் நன்கு அறிந்துள்ளனர் என்று ஒபாமா சுட்டிக் காட்டியதாக நிருபமா கூறினார்.

இரு தலைவர்களும் இந்திய அமெரிக்க கூட்டுறவு குறித்துப் பேச்சு நடத்தினர். பன்முக கலாச்சாரம், பொருளாதா சூழல் நிறைந்த இந்தியாவின் வளர்ச்சியில் அமெரிக்காவும் பங்கெடுக்கும் என நம்புவதாக பிரதமர் மன்மோகன் சிங் குறிப்பிட்டார். இரு நாடுகளும் இணைந்து வறுமை ஒழிப்பு, நோய் ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளதாகக் குறிப்பிட்டார். அமெரிக்க ஒத்துழைப்பு மூலம் இவற்றை எளிதில் சமாளிக்க முடியும் என்று பிரதமர் குறிப்பிட்டதாக நிருபர் ராவ் தெரிவித்தார்.

# ஆசிரியர் குழு

திரு. இரா. குருசாமி பி.ஏ.,

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. சுப. அண்ணாமலை

முனைவர் திரு. கதிர் மகாதேவன்

முனைவர் திரு. க. சின்னப்பா

தொடர்பு முகவரி

ஆசிரியர்

செந்தமிழ்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை
மதுரை - 625 001
தொலைபேசி : 0452 - 6575615

பதிப்பாசிரியர் : **இரா. அழகுமலை,** எம்.ஏ., எம்.ஃபில்.
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை – 1
தொலைபேசி : 0452 - 6575615

அச்சிடுவோர் : தவம் பிரிண்டர்ஸ், 32, மேலமாசி வீதி, மதுரை – 1

RNI Regd. No. 5508/56 June 2010



# செந்தமிழ்க் கல்லூரி

## மதுரைத் தமிழ்ச் சங்கம்

( தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது )

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை – 625 001 ✆ 0452 - 2343707, நிகரி : 0452 - 4373475

**2010 - 2011ஆம் ஆண்டிற்கான சேர்க்கை நடைபெறுகிறது**

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

**நன்கொடை கிடையாது**

**சிறப்பு அம்சங்கள்**

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன**

| இரா. அழகுமலை | முனைவர் க. சின்னப்பா | இரா. குருசாமி |
| --- | --- | --- |
| செயலாளர் | முதல்வர் | செயலாளர் |
| மதுரைத் தமிழ்ச் சங்கம் | செந்தமிழ்க் கல்லூரி | செந்தமிழ்க் கல்லூரி |

அனுப்புநர்,

**செயலாளர்**
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை - 625 001

*From*

**SECRETARY**
Madurai Tamilsangam
Madurai - 625 001
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,

Printed by **V. Govindarajan**, published by **R. ALAGUMALAI M.A., M.Phil.** on behalf of **Madurai Tamil Sangam, Madurai** and printed at **Davam Printers, 32, West Masi Street, Madurai - 1,** and published at **54, Tamil Sangam Road, Madurai.** Editor **R. ALAGUMALAI M.A., M.Phil.**